மலர்-4 இதழ்-78 நவம்பர் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play

இலவச
e-book



# சபரிமலையில் கன்னிப்பெண் கல்லாக மாறிய வரலாறு

# அண்ணாமலையாருக்கு புனுகு சாத்துவதின் ரகசியம்



பெரும்பாலும் பெருமாள் கோயில்களில்தான் புனுகு என்ற வாசனை திரவியத்தை பயன்படுத்துவார்கள்.

சிவாலயங்களில் சிவனுக்கு அபிஷேகம் நடைபெறும் ஆனால் வாசனாதிரவியங்களில் ஒருசில கட்டுப்பாடு இருக்கும். பெரும்பாலும் புனுகு சாத்துவது குறைவுவே, ஆனால் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் சன்னதியில் அபிஷேகத்தின்போதே புனுகு சாத்துவது கடைபிடிக்கப்பட்டு வரும் நடைமுறையாகும்.

இந்த நடைமுறை உருவான வரலாற்றை பார்ப்போம்.

புளகன் என்னும் அசுரனுக்கு நினைத்த வடிவம் எடுக்கும் ஆற்றல் இருந்தது. ஒருநாள், புனுகுப் பூனையாக மாறிய அசுரன், திருவண்ணாமலை கோவில் கருவறைக்குள் சென்றான். பூனையின் உடம்பிலிருந்து வெளி வரும் புனுகு என்னும் நறுமணப் பொருளைச் சிதற விட்டான். இந்த புண்ணிய செயலின் காரணமாக, அந்த அசுரனுக்கு ஆற்றல் அதிகரித்தது.

ஆணவத்தால் தேவர்களையும், முனிவர் களையும் துன்புறுத்தினான். இதைத் தாளாத தேவர்கள், சிவனிடம் முறையிட்டனர். அவர்களின் துயர் துடைக்க சிவன் விரும்பினாலும், வாசனை திரவியம் அளித்த புளகாசுரனைக் கொல்ல விரும்பவில்லை. மாறாக, சொர்க்க பதவி அளிக்க முடிவெடுத்தார்.

அதன்படி அசுரனின் முன் தோன்றிய அண்ணாமலையார், புனுகுப் பூனையாகமாறி தொண்டு செய்த நீ உயிரை விடும் நேரம் வந்து விட்டது, என்றார்.

இறைவா! நான் உயிரை விடுவதற்கு அஞ்சவில்லை. ஆனால், அதற்கு முன் என் விருப்பத்தை கேளுங்கள். உமக்கு வாசனைத் திரவியமான புனுகு சாத்தும் வழிபாடு எப்போதும் இங்கு நடக்க வேண்டும். புழுகணி ஈசன் (புனுகு அணிந்த சிவன்) என்னும் சிறப்பு பெயரும் உமக்கு வழங்க வேண்டும், என்று கேட்டுக் கொண்டு உயிர் நீத்தான். இதன்படி அண்ணா மலையாருக்கு, பூனையின் நினைவாக சந்தன அபிஷேகத்தின் போது புனுகு சாத்தும் வழக்கம் இப்போதும் உள்ளது.

# நகம், தசை, இமை, நரம்புடன் காட்சிதரும் திருமால்

திண்டுக்கல் அருகில் உள்ள தாடிக் கொம்பு கல்யாண சௌந்தரராஜப் பெருமாள் ஆலயம் மிகச் சிறந்த சிற்பங்களைக் கொண்டுள்ளது. தூணில் கருடன் மேல் அமர்ந்துள்ள திருமாலின் அழகிய இந்த சிற்பம், அப்படியே அந்த தூணின் கல்லிலயே வடிக்கப்பட்டது! இது போன்று இனி யாருமே செய்து விடக்கூடாது என்பதை மனதில் வைத்து செய்ததை போல.இங்கு உள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றிக்கும் நகம், இமை, தசை, நரம்பு போன்ற ஒவ்வொன்றும் தத்ரூபமாக வடிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிலையும் குறைந்தது 89 அடி பிரம்மாண்டமானவை! விஜயநகர மன்னர்களும், நாயக்க மன்னர்களும் போட்டிப் போட்டுகொண்டு வேலை செய்துள்ளனர். வாழ்கையில் ஒரு தடவை அல்ல பல தடவை சென்று காணவேண்டிய கோயில்.





## வில்வத்தின் சிறப்பு

பொதுவாக, வில்வ மரத்தின் வாசனை, அதன் வேர்களில் உள்ள குளிர்ச்சி ஆகியவற்றுக்கு பாம்புகள் வரும். அதனாலேயும் பயப்படுவர்கள். ஆனால், வீட்டில் வில்வ மரத்தை வைத்துக் கொள்வது மிகவும் விசேஷம். தவ விருட்ஷோத பில்வ: என்று ஶூக்தத்தில், மகாலட்சுமி அந்த மரத்தில் நித்யவாசம் செய்வதாகச் சொல்கிறது.

எனவே, "யார் வீட்டில் சாஸ்திரங்களில் சொன்னபடி நியமத்துடன் வில்வ மரத்தை வளர்க்கிறார்களோ, அந்த வீட்டில் மகாலட்சுமி நித்ய வாசம் செய்வாள்."

பூஜைக்குப் பயன்படுத்துகிற வில்வத்தை, சூரியன் உதயமாவதற்கு முன்னதாகவே பறித்து வைத்துக் கொள்வது உத்தமம்.

வில்வத்துக்கு தோஷம் கிடையாது என்பதால், சிறிது தண்ணீரை வில்வத்தின் மீது தெளித்துவிட்டு, பூஜைக்குப் பயன்படுத்தலாம்.

தினமும் சிவனுக்கு வில்வம் சார்த்தி அர்ச்சனை செய்து வழிபடுவது வாழ்வில் சிறப்பினைத் தரும்.

இதை வளர்த்து வரும் அனைவருமே நலமாக இருப்பதாக கூறி உள்ளனர்.

## சிவனுக்கு உகந்த வில்வம்

வில்வத்தில் மூன்று, ஐந்து மற்றும் ஏழு இதழ்கள் உள்ள வில்வ மரங்கள் உள்ளன. இதில் மூன்று இதழ் கொண்ட வில்வ இதழ்களையே பூஜைக்குப் பயன்படுத்துகிறோம். ஒவ்வொரு வில்வத்திலும் மும்மூர்த்திகள் நித்தியவாசம் செய்வதாக ஐதீகம்.

## பயன் எப்போது

வீட்டில் அகண்ட வில்வ மரம் வளர்த்து வந்தால் அது பெரிதாகி கனி கொடுத்த பிறகே பூஜை செய்த அதன் இலைகள் அருகதை உடையது.

ஆனால் வளரும் செடியை பூஜை செய்வ தால் அதுவரை குடும்பத்தில் துர் சக்திகள் விலகத் தொடங்கும். படிப்படியாக பொருட்சேர்க்கை ஏற்படும்.


ஆன்மிகமலர் மெயில் புக்

# காசியைவிட சிறப்பு வாய்ந்த ஸ்ரீகங்கைவராகநதீஸ்வரர்

## பித்ருதோஷம் நீக்கி செல்வவளம் தரும் சோடசலிங்கம்





சமீபத்தில் தமிழர்களின் நாகரீகம் மிகத் தொண்மையானது என்று கீழடி ஆராய்ச்சி, அரிக்கமேடு ஆராய்ச்சிகள் நிருபித்துள்ளன.

தமிழர்களின் பண்பாட்டுடன் இந்துமதம் பின்னிப்பிணைந்துள்ளது என்பதை பல்வேறு ஆராய்ச்சி தெளிவாக காட்டியிருந்தாலும், ஒருசில அரசி யல் காரணங்களால், இந்து மதத்தை தமிழர்களி டமிருந்து ஒருசில கூட்டம் பிரித்தே அவதூறு பரப்புகிறது.

இதில் அரிக்கமேடு பகுதியில் சங்கராபரணி நதிக்கரையை ஒட்டி பல சிவாலயங்கள் இன்றும் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன. சிவனுக்கு ஆபரணம் என்ற பொருளில் சங்கர ஆபரணம் என்பது திரிந்து சங்கராபரணி நதி என்று மாறியுள்ளது.

இந்த நதிக்கரையைஒட்டித் தான் தமிழர்கள் நவ நாக ரீகத்துடன் வாழ்ந்தனர் என்று ஆராயப்பட்ட அரிக்கமேடு பகுதியும் உள்ளது. தமிழர்கள் எழுப்பிய திருக்கோயில்களும் இந்த நதிக்கரைப் படுகையில் அதிகளவில் உள்ளது.



பல ஆலயங்கள் இருந்தாலும், குறிப்பாக மிகவும் புகழ் பெற்று விளங்குவது திருக்காஞ்சி என்று அழைக்கப்படும், ஸ்ரீகங்கைவராகநதீஸ்வரர் திருத்தலமாகும். இத்தலத்து ஈசன் சோடஸ வடிவில் அமைந்துள்ளார்.

சோடச வடிவம் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும், சிவபெருமான் அருவுருவாய் காட்சி தரும் விடிவத்தை லிங்கம் என்று அழைப்பார்கள். லிங்கம் என்பது பெரும்பாலும் பாணம் வடிவில், அதாவது உருளை வடிவில்தான் இருக்கும். ஆனால் உருளை வடிவமின்றி பட்டை வடிவமாக காட்சி தரும் லிங்கத்தை தாராலிங்கம் என்று அழைப்பார்கள், அதிலும் 16 பட்டைகளுடன் காட்சியளிக்கும் லிங்கத்தை சோடச லிங்கம் என்று அழைப்பார்கள்.

சமஸ்கிருதத்தில் சோடசம் என்றால் 16ஐக் குறிக்கும், இதனால் 16 பட்டைகளைக் கொண்ட லிங்கத்தை, சோடச லிங்கம் என அழைத்தனர். இந்த சோடச லிங்கங்களை தொடர்ந்து வழிபட் டால், முன்னோர்கள் வாழ்த்தும் 16 வகைப் பேறும் கிடைக்கப்பெற்று வாழ்வார்கள் என்பது ஐதீகம்.

தமிழர்கள் மற்றவரை வாழ்த்துவதில் முக்கிய வார்த்தையாக விளங்குவது “16ம் பெற்று பெருவாழ்வு வாழ்க” என்ற வார்த்தையே, இதனால் 16 பட்டைகளைக் கொண்ட சோடச லிங்க வழிபாடும் தமிழர்களுடன் பின்னிப் பிணைந்ததாகும்.

சங்கராபரணி நதியை, கிளிஞ்சலாறு, செஞ்சியாறு, வராக நதி என்று பல்வேறு பெயர்கள் கொண்டு விளங்குவதால் இத்தலத்து ஈசனை ஸ்ரீகங்கைவராகநதீஸ்வரர் என்று அழைக்கின்றனர்.

அகத்திய மகரிஷியின் திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாலும் இத்தலத்திற்கு அகத்தீஸ்வரம் என்றும் ஒரு சிறப்பு பெயர்

உள்ளது. இந்துக்கள் பலரும் வாழ்வில் ஒருமுறை யாவது காசிக்கு செல்லவேண்டும் என்று நினைப்பதுண்டு.

காசியில் உள்ள கோவில் எப்படி கங்கை கரையோரம் அமைந்துள்ளதோ அதே போல ஸ்ரீ கங்கைவராக நதீஸ்வரர் ஆலயம், சங்கராபரணி என்னும் நதிக்கரையில் அமைந்துள்ளது. சங்கராபரணி நதியானது கங்கை நதிக்கு நிகராக போற்றப்படுகிறது.

கங்கையில் எப்படி முன்னோருக்கு திதி தர்ப்பணம் கொடுக்கப்படுகிறதோ அதேபோன்று இத்தலத்திலும் கொடுக்கப்படுகிறது.

இத்தலத்து இறைவனை வழிபட்டால் பூர்வ ஜென்ம பாவ தோஷங்கள் அனைத்தும் நம்மை விட்டு விலகும் என்று கூறப்படுகிறது. இந்த நிகழ்விற்கு புராண கதையும் ஒன்று உள்ளது.

ஒரு சமயம் வேத விற்பன்னர் ஒருவர் தன்னுடைய தந்தையின் அஸ்தியை கங்கையில் கரைக்க புறப்பட்டு சென்றுள்ளார்.

போகும் வழியில் இங்குள்ள இறைவனை தரிசிக்க விரும்பிய அவர் இங்கு வந்துள்ளார். இங்கு வந்ததும் தன்னுடைய தந்தையின் அஸ்தி முழுவதும் பூக்களாய் மாறி உள்ளது. இதை கண்டு அவர் மெய் சிலிர்த்துள்ளார்.





அஸ்தியை பூக்களாக மாற்றும் சக்தி இந்த தளத்திற்கு உள்ளது என்றால் இது காசியை மிஞ்சும் வகையில் சக்தி பெற்ற ஒரு தலம் என்பதை அவர் உணர்ந்துள்ளார். அந்த சமயம் அவருக்கு, காசியில் செய்வேண்டிய பிதுர் கர்மாக்களை இங்கும் செய்யலாம் என்றொரு அசரீரி கேட்டுள்ளது.

இங்குள்ள சிவலிங்கமானது ஏறத்தாழ 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது என்று கூறப்படுகிறது.

மூலவர் மேற்கு நோக்கி அமர்ந்துள்ளார் இந்த தலத்தில் காமாட்சி மீனாட்சி என இரு அம்மன்கள் உள்ளனர். இங்குள்ள கருவறையானது தஞ்சை பெரிய கோவிலின் கருவறையை ஒற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியாவில் உள்ள பல கோயில்களை கொள்ளையடித்து சூறையாடிய வெளிநாட்டு கொள்ளைக்காரர்களால் இத்திருக்கோயிலின் சொத்துக்களும் கொள்ளையடிக்கப்பட்டதை வரலாறு தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இத்திருக்கோவிலையே சிதைக்க இஸ்லாமிய கொள்ளைக்கார மன்னர்கள் முயற்சி செய்ததாகவும், பிரெஞ்ச்காரர்களின் உதவியால் அது முறியடிக்கப்பட்டு மீண்டும் வழிபாட்டுத் தலமாக இத்திருக்கோயில் மாற்றப்பட்ட வரலாற்றுக் குறிப்புகள் இன்றும் உள்ளது.

காசிக்கு சென்று முன்னோர் தர்ப்பணம் செய்ய முடியாதவர்கள் இத்தலத்திற்கு ஒருமுறை வந்து சிவபெருமானை வணங்கி காசியில் செய்யப்படுவதைப் போன்று முன்னோர் வழிபாட்டை மேற்கொண்டால் காசியில் செய்ததைவிட அதிகப்படியான பலனை பெறலாம்.

மேலும் தொடர்புக்கு,
சரவண சிவாச்சாரியார்
தொலைபேசி எண்: 094427 86351

## சித்தர்கள் நிறைந்த தலம்



ஸ்ரீ கங்காதர சுவாமிகளின் ஜீவபீடம்

மிகப்பெரிய பேரழிவு காலத்தின் போது பெரு வெள்ளத்தால் பல பகுதிகள் அழியக் கூடாது என்று என்னிய அகத்தியப் பெருமான், ஸ்ரீ கங்கைவராக நதீஸ்வர பெருமானைக் குறித்து தவம் செய்து சங்கராபரணி நதியை வடக்கு நோக்கி திருப்பி உத்தரவாகினி நதியாக கடலில் கலக்கச் செய்துள்ளார்.

சங்கராபரணி ஆற்றின் கரையில் நவசித்தர்களான ஆதீதி வர்மன், கேசவ வர்மன், குபேரவர்மன், நாகேந்திரன், கமலன், வியூக முனி, மங்கலன், பிரம்மரிஷி மற்றும் சித்தானந்தன் ஆகியோரின் ஜீவ சமாதிகள் உள்ளன.

திருக்காஞ்சி ஸ்ரீ கங்கைவராக நதீஸ்வரர் ஆலயத்தின் ஈசான்ய திசையில் உள்ள ஸ்ரீ கங்காதர சுவாமிகளுக்கும், ஸ்ரீ சதாசிவசுவாமிகளுக்கும் அதிஷ்டானங்கள் இருந்துள்ளதை வரலாற்று ஆராய்ச்சிகள் வெளியிட்டுள்ளன.

தற்போது ஸ்ரீ கங்காதர சுவாமிகளுக்கு ஜீவபீடம் புதிய ஆலயம் கட்டுவதற்கு 23.08.2019 வெள்ளிக்கிழமை காலை 7.23 மணிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

# ஐஸ்வர்யம் தரும் வில்வபழ யாகம்

ஒரு வில்வ தளத்தை சிவனுக்கு அர்ப்பணம் செய்வதால் மூன்று ஜென்ம பாவம் விலகும் என்கிறது சாஸ்திரம். இருபத்தோரு வில்வ வகைகளுள் மிகவும் சக்தி வாய்ந்தது ஒரு வில்வதழை வகை.

இதன் காய்கள் சற்றே ஆப்பிள் பழம் போன்று தோற்றம் அளிக்கும். இலைகளை சிவார்ச்சனைக்கு பயன்படுத்திக் காய்களை மகாலட்சுமி யாகத்திற்கு பயன்படுத்துவார்கள். வடநூலார் இதை ஸ்ரீபலம் (மகாலட்சமி ரூபம்) என்று புகழ்வர்.

இந்த பழத்தால் யாகம் செய்வதால் ஐஸ்வர்யத்தின் வடிவாக விளங்கும். யாகாக்னி தேவன் திருமகளது கருணையை விரைவில் பெற்றுத்தருவார்

மிகப்பெரிய யாகங்கள் நடக்கும் போது 108 ஓமப் பொருட்களில் வில்வப்பழமும் ஒன்றாகிறது.

வில்வங்களில் 21 வகைகள் உள்ளதாகவும், அவற்றில் மகா வில்வமும், அகண்ட வில்வமுமே மிக உயர்ந்தாக சொல்லப்படுகிறது.

தேவலோகத்தை சேர்ந்த பஞ்ச தருக்களான ஐந்து மரங்களுள் (பாதிரி, மா, வன்னி, மந்தாரை,வில்வம்) என்று வில்வம், லட்சுமி தேவியின் திருக்கரங்களிலிருந்து தோன்றியதாக வராக புராணம் கூறுகிறது.

வில்வ மரத்தை வழிபடுவதால் லட்சுமி தேவியின் பரிபூரணமான அருள் கிட்டும்.

வில்வ இலைகள் சிவன் எனவும், முட்கள் சக்தி எனவும் கிளைகளே வேதங்கள் என்றும் வேர்கள் யாவும் முக்கோடி தேவர்கள் என்றும் போற்றப்படுகிறது.

சிவ பூஜை சமயத்தில் வில்வத்தால் அர்ச்சனை செய்தால் தீய சக்திகள் அகன்று தோஷங்கள் மறைந்து பகவான் ஈசனது அருட்பார்வை கிடைக்கும்.

# சபரிமலைக்கு சென்ற கன்னிப்பெண் கல்லாக மாறிய வரலாறு



சபரிமலைக்கு செல்லும் போது பந்தளம் கொட்டாரம் வாகா பகுதியில், விளக்குவாஞ்சி என்ற இடத்தில் இளையதம்புராட்டிகாவு என்ற கோவில் உள்ளது. மலைப்பிரதேசமாக இருப்பதால், இக்கோயில் சாலையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு கீழ்நோக்கி உள்ளது.

இக்கோவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே திறந்து விளக்கேற்றி வழிபாடு நடைபெறுகிறது.

இக்கோவிலில் ஒருகண்ணிப்பெண் இறைவனை வேண்டி கல்லாக மாறி, பிற்கால சந்ததியினர் அப்பெண்ணை இளையதம்புராட்டிகாவு என்ற பெயரில் அம்மனாக வழிபடுகின்றனர்.

அக்காலத்திலேயே இளம்பெண்கள்சபரி மலை ஐயப்பனை தரிசனம் செய்ய சென்ற தில்லை என்பதை நிருபிக்கும் வகையில் இந்த கோவிலின் தலவரலாறு அமைந்துள்ளது.



சரி வரலாற்றை பார்ப்போம்...

பாண்டிய வம்சத்தின் பந்தள நாட்டு அரசனான ராஜசேகரன் என்பவர் பம்பாதீரத்தில் குழந்தையாக இருந்த ஐயப்பனை கண்டெடுத்தார். அவருக்கு குழந்தை இல்லாதமையினால் ஐயப்பனை வளர்க்க உத்தேசித்தார். அதன்படி ஐயப்பன் வரலாறு துவக்கமாக அமைந்தாலும் முடிவில் ஐயப்பன் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டு சபரிமலையில் யோக நிலையில் தியானம் செய்வதாக ஐதீகம்.




இந்த வரலாற்றின் படி பாண்டிய வம்சத்தை சேர்ந்த ராஜசேரகர அரசனுக்கு பின்பு வந்த சந்ததியினர் ஐயப்பன் என்ற பெயரை அடைமொழியாக வைத்தே ஆட்சி செய்து வந்துள்ளனர்.

அந்தவகையில்தான் கொள்ளைக்காரனாக இருந்த வாபர் என்ற இஸ்லாமியரை ஐயப்பன் நண்பனாக்கிக் கொண்டதாக வரலாறு திரிக்கப் பட்டது.

அந்த வம்சத்தில் வந்த, ஐயப்பன் என்ற குலப்பெயர் கொண்ட அரசனால் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உண்மையில் ஐயப்பனுக்கும் வாபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, ஐயப்பன் இருந்த காலகட்டத்தில் இஸ்லாமியர்களே கிடை யாது என்று வரலாற்று ஆய்வாளர்களின் நிருபிக் கப்பட்ட சான்றாகும்.

அதே சமயம் பல்வேறு நிகழ்வுகள் ஐயப்பனின் கதைகளில் மழுங்கடிக்கப்பட்டுள்ளதும் உண்மை. சபரிமலையைச் சுற்றி உள்ள சிறு சிறு கோவில்களின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், ஐயப்பன் கதையுடன் இணைந்த பல தகவல்கள் கிடைக்கும்.

மாற்று மத வளர்ச்சி, இந்து மத துவேஷம் போன்ற ஒருசில காரணங்களால் வரலாறு மறைக்கப்படுவது வேதனைதான்.

அவ்வாறு மறைக்கப்படும் ஒரு சிறு




கோவிலின் வரலாற்றை பார்ப்போம்.

ராஜசேகர மன்னனின் வம்சத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் மன்னனாக முடி சூட்டிக்கொண்டது முதல் தங்களது குலதெய்வமான ஐயப்பனை குடும்பத்துடன் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் உள்ளது போன்று எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால், சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்ய சென்றால் திரும்புவதற்கு ஒருசில மாதங்கள் கூட ஆகும்.

இதனால் கன்னிப்பெண்களாக பூப்பெய்தும் வயதில் இருக்கும் பெண்களை, சபரிமலைக்கு அழைத்துச் செல்வதை மன்னர் வம்சத்தினர் தவிர்த்து வந்தனர்.

இது நடைமுறையில் இருக்கும்போது, ஐயப்பனின் வம்சத்தை சேர்ந்த ஒரு மன்னரின் குடும்பத்தினர் சபரிமலை நோக்கி தங்கள் பயணத்தை துவக்கினர், குடும்பம் சகிதம் செல்லும் போது பாதி தூரத்தை கடந்தனர், இரவு பொழுதில் ஓரிடத்தில் தங்குவது சூரிய உதயம் ஆனவுடன் பயணம் என்ற வரைமுறையில் பல நாட்கள் காட்டுப்பாதையில் பயணத்தை தொடர்ந்தனர் மன்னர் குடும்பத்தினர்.

மன்னர், அரசி மற்றும் குழந்தைகள், பாதுகாவலர்கள் என்று மிகப்பெரிய கூட்டமாக பயணம் தொடரும்போது, யாரும் எதிர்பாராத விதமாக மன்னரின் உறவுக்கார சிறு பெண் வயது அடையும் பருவம் நெருங்கிவிட்டதை உணர்ந்தாள். விஷயத்தை, மன்னரும் அரசியும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தாலும், தாங்கள் மேற்கொண்ட பயணத்தில் கண்ணிப்பெண் இடையூராக இருப்பாளே என்று ஒரு பக்கம் துக்கமும் அடைந்தனர்.

இதை அறிந்த அப்பெண், மன்னனிடம், "நான் இக்காட்டுப் பகுதியிலேயே தங்கி விடுகிறேன்... நீங்கள் பயணத்தை தொடர்ந்து நமது குலதெய்வமான ஐயப்பனை தரிசித்து வரும்போது உங்களுடன் இணைந்து கொள்கிறேன், அதுவரை நான் இங்கேயே இருக்கிறேன்" என்று சமாதானப்படுத்தி, அரசர் குடும்பத்தினரை அனுப்பி வைத்தாள்.





பயணம் எத்தனை நாளில் முடியும் என்பது யாருக்கும் தெரியாது.

நாட்கள் மெல்ல சென்றது. அந்தப் பெண்ணிற்கு காட்டுவிலங்குகள்மீது ஒருவித பயம் தொற்றிக் கொண்டது. உடனே இறைவனை நோக்கி தவம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். கடுமையான தவத்தின் பயனாக தன்னைத் தானே கல்லாக மாற்றிக் கொண்டு அந்த இடத்திலேயே தவயோக வாழ்க்கையை தொடங்கி விட்டாள்.

சபரிமலை பயணம் செய்துவிட்டு திரும்பிய அரசர் குடும்பத்தினர், அப்பெண்ணை விட்ட இடத்தில் சென்று பார்த்தபோது, அப்பெண் கல்லாக மாறி தெய்வ நிலை அடைந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

உடனே அங்கேயே அப்பெண்ணுக்கு ஒரு ஆலயத்தை நிர் மாணித்து, மலையாள மாதத்தின் துவக்க நாள் அன்று அப் பெண்ணிற்கு மிகச் சிறந்த விழா எடுத்து இன்று வரை கொண்டாடி வருகின்றனர்.

இன்றும் கன்னிப்பெண்கள் பலர் இந்த தம்புராட்டியை தங்கள் குலதெய்வமாகவே வணங்கிவருகின்றனர். இத்திருக்கோவிலை பந்தளம் கொட்டாரம் வாகா டிரஸ்ட் நிர் வகித்து வருகிறது. சபரிமலையைப் போன்று இத்திருக்கோவிலும் பந்தள மகாராஜா குடும்பத் தினர் வழிபடும் கோவிலாக திகழ்கிறது.

சபரிமலைக்சென்று ஒரு நியதியை வகுத்த முன்னோர்களின் வாக்கினை காப்பாற்றவும், ஐயப்பனின் யோக நிலை தியானத்திற்கு எந்தவித பாதிப்பும் வராமல் தடுக்க, தன்னைத்தானே கல்லாக்கிக் கொண்ட பெண் தெய்வத்தை, சபரிமலைக்கு செல்லும் வழியில் வாய்ப்பு கிடைத்தால் நாமும் வணங்கிவிட்டு செல்லலாம். மறைக்கப்பட்ட இந்த தம்புராட்டியின் வரலாற்றை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்.

ச.நா.ராஜன்,
தொடர்பு எண்: 0825844033

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# சிலை வழிபாடு சரியா

## மஹரிஷி ரமணரின் பதில்!

மாற்றுமதத்தைச் சேர்ந்த அன்பருக்கு சிலை வழிபாடு என்பது அவசியமா என்ற சந்தேகம் ஏற்பட்டது, திருவண்ணாமலையில் அருளாட்சி செய்து கொண்டிருந்த ரமண மஹரிஷியை அணுகி தனது சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள எண்ணினார்.

பெரும்பாலும் மௌனத்தையே பாஷையாகக் கொண்டு வந்திருந்தோரின் மனதில் சந்தேக விளக்கம் தானாகவே கிடைக்கும்படி அருள் பாலிப்பது அவர் வழக்கம்.

சில சமயம் வந்திருந்திருப்பவரின் பக்குவத் திற்கேற்ப பதிலை அருள்வதும் உண்டு.

சந்தேகம் கொண்ட மாற்றுமத அன்பரும் அவரின் நண்பரும் உருவ வழிபாடு பற்றி சந்தேகத்தை ரமணரிடம் கேட்டே விட்டனர்.

அவர்களின் கேள்வியும், ரமணரின் பதிலையும் பார்ப்போம்....

❖❖❖

பக்தர்: கடவுளுக்கு உருவம் உண்டா?

மஹரிஷி: அப்படி என்று யார் சொன்னது?

❖❖❖

பக்தர்: அப்படி என்றால், கடவுளுக்கு உருவம் இல்லை என்றால், சிலைகளைக் கும்பிடுவது சரியா?

மஹரிஷி: கடவுளை விட்டு விடுவோம். ஏனென்றால் அவர் யாருக்கும் பிடிபடாதவர். உங்களை எடுத்துக் கொள்வோம். உங்களுக்கு உருவம் உண்டா?

❖❖❖

பக்தர்: ஆம், எனக்கு உருவம் உண்டு; பெயர் உண்டு.

மஹரிஷி: அப்படி என்றால் உடல் அங்கங்களைக் கொண்ட ஒரு மனிதர் நீங்கள். ஆறடி உயரம், தாடி கொண்டவர். சரி தானே!

❖❖❖

பக்தர்: நிச்சயமாக அப்படித்தான்!

மஹரிஷி: சரி, அப்படியானால் தூங்கும் போது உங்களை நீங்கள் காண்கிறீர்களா?

❖❖❖

பக்தர்: விழித்து எழுந்தவுடன் நான் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறேன் என்பது தெரிகிறது. ஆகவே, அநுமானத்தின் மூலமாக நான் இப்படி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கிறேன் என்பது தெரிய வருகிறது.

மஹரிஷி: நீங்கள் உடல் தான் என்றால் இறந்த பிறகு சவத்தை ஏன் புதைக்க வேண்டும்? உடல் தன்னைப் புதைப்பதை எதிர்க்க அல்லவா வேண்டும்?

❖❖❖

பக்தர்: இல்லை, நான் பரு உடலில் உள்ளே இருக்கின்ற உள்ளுறை ஜீவன்.

மஹரிஷி: ஓ! அப்படி என்றால் உண்மையி லேயே நீங்கள் உருவம் இல்லாதவர் என்றாகிறது. ஆனால் இப்போது உடல் மூலமாக உங்களை அடையாளம் கண்டு சொல்கிறீர்கள்.

இப்படி உடலுடன் இருக்கும் போது அடையாளம் காணும் நீங்கள், உருவம் இல்லாத கடவுளை உருவமாகக் காண்பதில் என்ன தவறு இருக்கிறது?

கேள்வி கேட்டவர் திகைத்து விட்டார். இன்றைய கால கட்டத்திற்கு தேவையான பதிலை ரமணர் அன்றே தந்ததுதான் சிறப்பு...



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com

# சித்து வேலை: ஞானிக்காக இறைவன் செய்வான் உண்மை ஞானி தவிர்ப்பான்

வாயிலிருந்து லிங்கம் எடுப்பதும், வெறும் கையில் விபூதி மற்றும் தங்க சங்கிலி எடுப்பதும் பல சாமியார்களின் சித்து வேலையாக இருக்கிறது.

இந்த சித்துக்கள் நிஜமானதா?

அப்படி செய்கின்றவர்களை குருமார்கள் என கருதலாமா? என்று பலருக்கு சந்தேகம் உண்டு

இன்னும் பலரோ சித்து வேலைகளை கண்டு பிரமித்து மயங்கி விடுகிறார்கள்

நம்மால் செய்ய முடியாததை இத்தகைய சாமியார்கள் செய்யும் போது அவர்களிடம் விஷேச சக்தி இருப்பதாக நினைத்து மலைப்படைந்தும் விடுகிறார்கள்

பதஞ்சலி மகரிஷி என்பவர் யோக சூத்திரம் என்ற நூலை எழுதியுள்ளார்.

அந்த நூலில் கைவல்லிய பாகம் என்ற பகுதியில் இந்த மாதிரி பல சித்துக்களை பற்றி மிக விரிவாகவே சொல்கிறார்.

என்னென்ன சித்துக்கள் செய்யலாம்? சித்து செய்யும் சக்தியை எந்த வகையில் பெறலாம் என்பதை பற்றியெல்லாம் விவரிக்கிறார்.

முக்காலத்தையும் கூறுவது, தண்ணீல் நடப்பது, ஆகாயத்தில் பறப்பது என்று சித்துக்களின் மிக நீண்ட பட்டியலையும் தருகிறார்.

அந்த நூலில் கடைசியாக மாபெரும் சித்து சக்தியாக அவர் எதை குறிப்பிடுகிறார் என்றால் தன்னையும், தன் புலனையும் அடக்கி மாயஜாலசக்திகளை துறந்து ஆத்ம விடுதலை பெறுவதே அவர் கூறும் மாபெரும் சித்தாகும்.




யோக வாழ்க்கையில் நடுப்பகுதியில் யோகம் பயில்பவர்களுக்கு சில அதீத சக்திகள் உண்டாகும்.

தரையிலிருந்து ஒரு அடி உயரமாவது எழுவது, நினைத்தது எல்லாம் நடப்பது, கேட்பதெல்லாம் கிடைப்பது, சொல்வதெல்லாம் பலிப்பது என்று இன்னும் சில சக்திகளை பெறலாம்.

பெருவாரியான யோகிகள் இந்த சக்தி கிடைத்தவுடன் தாங்கள் முழுமை பெற்று விட்டதாக நினைத்து பொது ஜனங்களிடத்தில் பிரபலமடைந்து விடுகிறார்கள்.

இதனால் அவர்கள் ஆத்ம விடுதலையை நோக்கி பயணபடாமல் சாதாரண உலக சுகங்களில் மயங்கி கிடக்கிறார்கள்.

ஆண்டவனை அடைய நினைக்கும் யோகிக்கு ஆண்டவனை காண துடிக்கும் ஞானிக்கு சித்துக்கள் என்பது மலத்துக்கு சமமானது.

ஞானிகளுக்காக இறைவனே சில சித்துக்களை நடத்தி காட்டுவானே தவிர ஞானிகள் அதை செய்யமாட்டார்கள்.

யோக வாழ்க்கையில் முறைப்படியான பயிற்சி பெறுவதன் மூலம் சித்துக்கள் பெறுவது ஒருவகை.

போலியாக பல சித்துக்களை செய்து காட்டுவது இன்னொரு வகை.

வாய்க்குள் இருந்து லிங்கம் எடுப்பதெல்லாம் சரியான மோசடியாகும்.

வெறுங்கையில் விபூதி வரவழைப்பது, மலர்களை வரவழைப்பது, தங்க சங்கிலிகளை வரவழைப்பது என்பதில் பல மோசடிகள் இருந்தாலும் தாந்ரீக கலையில் ஓரளவு தேர்ச்சி பெற்ற சில சாமியார்கள் யட்சினி என்ற முக்கால் பங்கு பைசாசத்தை வசியப்படுத்தி இம்மாதிரியான காரியங்களை செய்கிறார்கள்.

வேறு சில சாமியார்கள் தங்களது ஆடைகளுக்குள்ளோ உடம்பிற்குள்ளோ பொருட்களை மறைத்து வைத்து கண்ணிமைக்கும் நேரத்தில் வெளியிலெடுத்துக் காட்டி நம்மை அதிசயத்தில் ஆழ்த்தி விடுகிறார்கள்

ஒரு உண்மையான சாது தன்னிடம் ஆயிரம் சித்து சக்தி இருந்தாலும் அதை தேவை இல்லாமல் தன்னை பெருமை படுத்திக் கொள்ளும் விதத்தில் வெளிப்படுத்த மாட்டார்

ஆனால் தன்னை முழுமையாக நம்பிய மனிதர்களுக்காக கடவுளின் திருவுள்ளத்தை உணர்ந்து பயன் படுத்துவார்

சில சாதுக்கள் அப்படி செய்தற்காக பயனாளிகளிடம் காணிக்கை கூட பெறுவார்கள், ஆனால் அந்தக் காணிக்கை அவர்களின் சொந்த உபயோகத்திற்கு எடுக்க மாட்டார்கள். ஆலயத்திருப்பணிகள் சமூக சேவைகள் என்று செலவு செய்து விடுவார்கள்.

இப்படிப்பட்ட நிறையபேர்களை நானறிவேன்,எனவே சித்து வேலைகள் செய்பவர்கள் அனைவரும் போலிகள் என்றும் கூற இயலாது இந்தத் தரவரிசையில் அசலையும் போலிகளையும் அடையாளம் காணுவது சாதாரண மனிதர்களுக்கு சற்று கடினம்தான்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434





# கௌரவர்கள்

பாண்டவர்கள் ஐவர் நாம் நன்கு அறிவோம்.... அதுபோல் கௌரவர்கள் நூறு பேர் யார் என்பது பலருக்கு தெரியாது, ஒருசிலரைத் தவிர மற்றவர் பெயர் தெரியாது, அவ்வாறு தெரியாதவர்களுக்கு தெரிந்து கொள்ள கௌரவர்கள் 100 பேரின் பெயர்களையும் கொடுத்துள்ளோம், ஆனால் கௌரவர்கள் 101 பேர், இதில் ஆண்கள் 100 பேரும். ஒரே சகோதரி துர்சலை, சகோதரியை சேர்க்காமல்தான் இதுவரை கௌரவர் என்றால் 100 பேரை மட்டும் குறிப்பிட்டு வந்துள்ளனர். நாம் 101ஆவதாக உள்ள சகோதரியையும் சேர்த்து பெயர் பட்டியல் தந்துள்ளோம்.:

1 துரியோதனன் Duryodhana
2 துச்சாதனன் Dussahana
3 துசாகன் Dussalan
4 ஜலகந்தன் Jalagandha
5 சமன் Saman
6 சகன் Sahan
7 விந்தன் Vindhan
8 அனுவிந்தன் Anuvindha
9 துர்தர்சனன் Durdharsha
10 சுபாகு Subaahu
11 துஷ்பிரதர்ஷனன் Dushpradharsha
12 துர்மர்ஷனன் Durmarshana
13 துர்முகன் Durmukha
14 துஷ்கரன் Dushkarna
15 காஞ்சநத்வாஜா Kaanchanadhwaja
16 விகர்ணன் Vikarna
17 சலன் Saalan
18 சத்வன் Sathwa
19 சுலோசனன் Sulochana
20 சித்ரன் Chithra
21 உபசித்ரன் Upachithra
22 சித்ராட்சதன் Chithraaksha
23 சாருசித்ரன் Chaaruchithra
24 சரசனன் Saraasana
25 துர்மதன் Durmada
26 துர்விகன் Durvigaaha
27 விவித்சு Vivilsu
28 விக்தனன் Vikatinanda
29 உர்ணநாபன் Oornanaabha
30 சுநாபன் Sunaabha
31 நந்தன் Nanda
32 உபநந்தன் Upananda
33 சித்திரபாணன் Chithrabaana
34 அயோபாகன் Ayobaahu
35 சித்திரவர்மன் Chithravarma
36 சுவர்மன் Suvarma
37 துர்விமோசன் Durvimocha
38 மகாபாரு Mahaabaahu
39 சித்திராங்கன் Chithraamga
40 சித்திரகுண்டாலன் -Chithrakundala
41 பிம்வேகன் Bheemavega
42 பிமவிக்ர Bheemavikra
43 பாலகி Vaalaky
44 பாலவரதன் Belavardhana
45 உக்ரயுதன் Ugraayudha
46 சுசேனன் Sushena
47 குந்தாதரன் Kundhaadhara
48 மகோதரன் Mahodara
49 சித்ரயுதன் Chithraayudha
50 நிஷாங்கி - Nishamgy
51 பஷி Paasy
52 விருதகரன் Vrindaaraka
53 திரிதவர்மன் Dridhavarma
54 திரிதட்சத்ரன் Dridhakshathra
55 சோமகீர்த்தி Somakeerthy
56 அனுதரன் Anthudaran
57 திரிதசந்தன் Dridhasandha
58 ஜராசங்கன் Jaraasandha
59 சத்தியசந்தன் Sathyasandha
60 சதஸ் Sadaas
61 சுவாகன் Suvaak
62 உக்ரச்ரவன் Ugrasravas
63 உக்ரசேனன் Ugrasena
64 சேனானி Senaany
65 துஷ்பரஜை Dushparaaja
66 அபராஜிதன் Aparaajitha
67 குண்டசை Kundhasaai
68 விசாலாட்சன் Visaalaaksha
69 துராதரன் Duraadhara
70 திரிதஹஸ்தன் Dridhahastha
71 சுகஸ்தன் Suhastha
72 வத்வேகன் Vaathavega
73 சுவர்ச்சன் Suvarcha
74 ஆடியகேது Aadithyakethu
75 பாவசி Bahwaasy
76 நகாதத்தன் Naagadatha
77 அமப்ரமாதி Amapramaadhy
78 கவசி Kavachy
79 கிராதன் Kradhana
80 சுவீர்யவ Suveeryava
81 குண்டபேடி Kundhabhedy
82 தனுர்தரன் Dhanurdhara
83 பீமபாலா Bheemabala
84 வீரபாகு Veerabaahu
85 அலோலுபன் Alolupan
86 அபயன் Abhaya
87 உக்ராசாய் Ugrasaai
88 திரிடரதச்ரயன் Dhridharathaasraya
89 அனாக்ருஷ்யன்Anaadhrushya
90 குந்தபேதி Kundhy
91 விரவி Viraavy
92 சித்திரகுண்டலகன் Chithrakundhala
93 தீர்தகாமாவு Dhridhakarmaavu
94 பிரமாதி Pramadhan
95 வீர்யவான் Viraavy
96 தீர்கரோமன் Deerkharoma
97 தீர்கபூ Dheerkhabaahu
98 மகாபாகு Mahabaahu
99 குந்தாசி Kundhaasy
100 விரஜசன் Virajass
101 துர்சலை Dursalai
(ஒரே ஒரு சகோதரி)

# லலிதாதேவியின் படைத் தளபதிகள்



பல்வேறு காலகட்டத்தில் பலவிதமான அசுர வதங்களை செய்து உலகை காத்தவள் லலிதாதேவி, இந்த தேவியின் போர் திறமைக்கு பல்வேறு புராணக் கதைகள் கூறப்படுகிறது.

இதில் முக்கியமாக லலிதா தேவிக்கு போர்படைத் தளபதிகளாக விளங்கிய நான்கு பேர் மிக முக்கியமானவர்கள். அதிலும் குறிப்பாக வராகி ரூபத்தில் காட்சியளிக்கும் படைத்தளபதிக்கு அதிகப்படியான புராண கதைகள் உள்ளது.

ஸ்ரீலலிதா மஹா திரிபுரசுந்தரி பராபட்டாரிகாவுக்கு சேனா நாயிகைகள் நால்வர். அவர்கள் ஸம்பத்கரீ. அச்வா ரூடா, மந்த்ரிண்யம்பா தண்டநாதா என்பவராவார்.

### 1. ஸம்பத்கரீ:

ஸ்ரீ லலிதா தேவியின் அங்குசம் என்ற ஆயுதத்தினின்றும் ஆவிர்பவித்தவள். யானைப்படைக்குத் தலைவி.

### 2. அச்வாரூடா:

பாசத்தினின்றும் உதித்தவள். குதிரைப்படைக்கு லலிதா தேவியினால் தலைவியாக நியமிக்கப்பட்டவள்.

### 3. மந்த்ரிண்யம்பாஸ்ரீ:

லலிதா தேவியின் அமைச்சர், தலைவி லலிதைக்கு உறுதுணையாய் நிற்பவள்.

### 4. தண்டநாதா:

சக்திஸேனை அனைத்துக்கும் தலைவி, இவளை சேனாநாயிகா என்றும் அழைப்பார்கள், இவளைத்தான் வாராஹீ எனக்கூறுகின்றோம். இவளுடைய ரதத்திற்கு கிரிசக்கரம் என்று பெயர். கிரிசக்ர ரதாரூட தண்டனாதா புரஸ்க்ருதா என லலிதா ஸஹஸ்ர நாமம் கூறும். இவள் வாஹனமாகிய சிம்மத்திற்கு வஜ்ரகோஷம் என்று பெயர். இது மூன்று யோசனை தூரம் உயரம் கொண்டது.

இந்த தண்டநாதாவுக்கு பல பெயர்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவை பஞ்சமீ, தண்டநாதா, ஸங்கேதா, ஸமயேச்வரீ, ஸமய ஸங்கேதா, வாராஹ போத்ரிணீ, சிவா, வார்த்தாளீ, மஹாஸேனா, ஆஞ்ஞா சக்ரேச்வரீ, அரிக்ன என்பனவாகும். இவளது இந்த நாமாக்களையும் சொல்லுபவர் சங்கடம், துக்கம் இவற்றை என்றும் அனுபவிக்கமாட்டார்.

இவள் பண்டாசுரனுடைய வலது கையினின்றும் தோன்றிய விசுக்ரன் என்பவனைக்கொன்று உலகிற்கு உதவினாள். இவள் லலிதாதேவியின் வாஸபூமியான ஸ்ரீநகரத்தில் 16வது பிராகரத்தில் கொலுவீற்றிருக்கிறாள். இந்த 16வது பிரகாரம் மரகதமயமானது. மஹா பத்மாடவீதியில் இருந்து கொண்டு இவள் லலிதா பரமேஸ்வரிக்கு அருந்தொண்டாற்றுவாள்.

இவள் நூறு ஸ்தம்பங்கள் கொண்ட மண்டபத்தில் பொன் தாமரையில் வீற்றிருப்பாள். உருக்கிய பொன் போல் மேனியள், செந்நிற ஆடை அணிந்து சர்வ ஆபரணங்களையும் அணிந்து அழகுடன் தோன்றுவாள்.

இவள் 8 கைகளிலும் சங்கம், சக்கரம், அபயம், வரம், கலப்பை, உலக்கை, பாசம், அங்குசம் என்ற ஆயுதங்களைத் தரித்துக் கொண்டிருப்பாள் சந்திர கலையை சூட்டிக்கொண்டு வராஹ முகத்துடன் காட்சி யளிப்பாள்.

இவளுக்கு உன்மத்த பைரவீ, ஸ்வப்னேசீ, திரஸ்க்ருதி, கிரிபதா, தேவீ என்பவர்கள் பரிவாரங்களாவர்.

இந்த வாராஹீ தன்னை உபாசிப்பவர்களுக்கு சத்ருபாதையைப் போக்குவாள். இவள் மாத்ருகா கணத்தில் ஒருவளாய் கணக்கிடப்பட்டிருக்கின்றாள்.

மாதாக்கள் ப்ராம்ஹீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, இந்த்ராணி, சாமுண்டா என்பவர்கள். மஹா லக்ஷ்மியையும் சேர்த்து எட்டு எனக் கணக் கிடுவர். இவர்கள் அனைவரும். உலகம் மங்களம் பெற பாடுபடுவர்.

இந்த வாராஹீ மாதா தாருகாஸுரன் சண்டையில் காளிக்கு உதவியாகவும், சும்பாஸுரன் சண்டையில் சண்டிகாதேவிக்கு உதவியாகவும், பண்டாஸுர வதத்தில் லலிதா தேவிக்கு உதவியாகவும் இருந்து பல தொண்டுகள் புரிந்திருக்கின்றாள்.

இந்த அன்னையை பஞ்சமி, அஷ்டமி, அமாவாசை,பௌர்ணமி தினத்தில் தேங்காய் நெய் தீபம் ஏற்றி வழிபட சகலமும் கைகூடும்.

# குருவின் கட்டளையால் வீட்டு வேலை செய்த ஆசார்ய பக்தி

ஸ்ரீ வைஷ்ணம் தந்த மிகப் பெரிய மஹான் ஸ்ரீமத் ராமானுஜர், அவரது தலைசிறந்த சீடர்கள் முதலியாண்டானும், கூரத்தாழ்வானுமாவர். ஸ்ரீ ராமானுஜரின் குருவான பெரியநம்பியின் மகள் அத்துழாய் ஒரு நாள் காவேரிக்கு நீராடப் போகப் பிரியப்பட்டுத் தனது மாமியாரைத் துணைக்கு அழைத்தாள்.

“நீ தான் பிறந்த வீட்டிலிருந்து பணிப் பெண்களை ஏராளமாக அழைத்து வந்திருக்கிறாயே, அவர் களில் ஒருவரை அழைத்து போவது தானே? என் பிராணனை ஏன் வாங்குகிறாய்? நான் என்ன உனக்கு வேலைக்காரியா” என்று மாமியார் எரிந்து விழுந்தாள்...

மாமியார் இப்படித் தனது பிறந்த வீட்டின் ஏழ்மையைச் சுட்டிக் காட்டியதால் மனம் வெதும்பிய அத்துழாய் அழுது கொண்டே தனது தந்தை பெரிய நம்பியிடம் வந்து நடந்ததைத் தெரி வித்தாள்.

பெரிய நம்பி “இதற்கும் எனக் கும் என்ன சம்பந்தம்? இது உன் ஜீயர் பொறுப்பு” என்று சொல்ல மனம் உடைந்த அத்துழாய் ஸ்ரீ ராமா னுஜரிடம் வந்தாள்.

ஸ்ரீ ராமானுஜர் அத் துழாய் சொன் னதை நிதானமாகக் கேட்டு விட்டு, முதலி யாண்டானைச் சுட்டிக் காட்டி “இதோ இருக்கிறான் உன் வேலைக்காரன், பணிப் பெண்ணாக இவனை அழைத்துப் போ” என்றார்.

அத்துழாய் பிரமித்து நின்றாள். முதலி யாண்டான் “வா அம்மா உன் இல்லம் செல்லுவோம்” என்று கூறி அவளுடன் சென்றார்.

அன்று முதல் முதலியாண் டான், அத்துழாய் வீட்டு வேலைக்காரனானார். எல்லா வேலை களையும் நிதானமாகவும், மலர்ந்த முகத்துடனும் செய்தார். வீடு பெருக்குதல், தண்ணீர் தெளித்து கோலம் போடுதல், உணவு சமைத்தல், துணி களை துவைத்தல் முதலியவற்றை மிக அழகாகவும் திறமையுடனும் செய்தார். பரம பாகவதரான முதலியாண்டான் இதுரு போன்ற வீட்டு வேலைகளைச் செய்வதைக் கண்டு, அத்துழாயின் வீட்டினர் மிகவும் அஞ்சினர்.



அவர்கள் முதலியாண்டானை வணங்கி “சுவாமி தாங்கள் மிகப் பெரிய மகான், தாங்கள் இதுபோன்று எங்களது வீட்டு வேலைகளைச் செய்து எங்களை மேலும் பாவிகளாக்க நாங்கள் என்ன தவறு செய்தோம்” என்று கேட்டார்கள்.

முதலியாண்டான் “எனக்கு எதுவும் தெரி யாது. என் குருநாதர், இங்கு வேலை செய்ய உத்தரவிட்டார் அதை நான் செய்கிறேன்” என்று சொல்லிவிட்டார்.

அத்துழாயின் மாமனார் வீட்டார், முதலி யாண்டாரின் குருவான பெரிய நம்பியிடம் சென்று “பெரிய நம்பிகளே... எங்கள் குடும்பத்திற்கு ஏன் பாவத்தை ஏற்படுத் துகிறீர்கள். முதலியாண்டான் எங்கள் வீட்டில் வேலை செய்ய எங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? அவ ரை தயவு செய்து திருப்பி அழைத்துக் கொள்ளுங்கள்” என்று மன்றாடினார்கள்.

“எனக்கு இதைப் பற்றி ஏதும் தெரியாது, நீங்கள் ஆசார்யனைக் கேளுங்கள்” என்று சொல்லி அனுப்பிவிட்டார் பெரிய நம்பி.

அவர்கள் ஸ்ரீராமானு ஜரிடம் சென்று முறையிட் டார்கள். ஸ்ரீராமானுஜர் மெதுவாகப் பதில் சொன்னார்.

“உங்கள் மருமகள் பிறந்த வீட்டிலிருந்து வேலைக்காரனொருவனை அழைத்து வருமாறு உங்கள் வீட்டு எஜமானி உத்தர விட்டாளாம். நானும் முதலியாண்டானும் பரமகுரு வான பெரியநம்பியின் அடிமைகள். முதலி யாண்டானை உங்களுக்குப் பிடிக்கா விட்டால், உங்கள் வீட்டு வேலைக்காரனாக நானே வருகிறேன்” என்றார்.

அவர்கள் வெட்கத்தால் தலைகுனிநது நின்றார்கள். முதலியாண்டான் மடத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். ஆசார்யன் இட்ட அடிமை வேலையைத் தமக்கு கிடைத்த பெறும் பேறாக கருதினார் முதலியாண்டார். அவரின் குரு பக்திக்கு நிகர் வேறு ஏதுமில்லை.

-A.G.ரவி, 9750719085

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுன்லோடு செய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
GET IT ON Google Play


ஆன்மிகமலர் மெயில் புக்

# பரிசுத்தமான இதயம் ஒரு தெளிவான உள்நோக்கு

அன்பு குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: "பாலுணர்வைக் கடந்து உங்களை நிறுத்தி, மற்றவர்களைப் பார்க்கும்போது, அவர் ஆண்களா அல்லது பெண்களா என்பதை நீங்கள் உணர முடியாத அளவிற்கு உங்கள் இதயத்தைப் பரிசுத்தமாக்கினால், நீங்கள் முன்பு அறிந்திருந்த ஆன்மாக்களை உங்களால் எப்பொழுதும் உடனடியாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். தேகத்தைக் கடந்த அந்த உணர்வுநிலையை நீங்கள் வளர்த்திருந்தால், நீங்கள் கணப்பொழுதில் உங்களுக்கு முன்பே தெரிந்தவர்களை அடையாளம் காண முடியும். ஒரு ஆறுமாதக் குழந்தையை நீங்கள் பார்க்கிறீர்கள் எனவும் அதன் பின்பு பல வருடங்களாக நீங்கள் மீண்டும் அதைப் பார்க்கவில்லை எனவும், அது ஓர் ஆண் மகனாக வளர்ந்து விட்டதெனவும் வைத்துக் கொள்வோம். அம்மனிதனுள் அந்தக் குழந்தையை ஒருவேளை நீங்கள் அடையாளம் காணாமல் இருக்கலாம். எனினும் குறிப்பிட்ட அம்சங்கள், உங்கள் மனதில் பதியும் அளவிற்கு நீண்ட காலம் நீங்கள் அக்குழந்தையை அறிந்திருந்தால், ஒரே மாதிரியாகவே இருப்பதை நீங்கள் கண்டு பிடிப்பீர்கள். எனவே நமது கடந்த பிறவியின் சில அம்சங்கள் நம்முடனேயே தங்கி விடுகின்றன. குறிப்பாக கண்கள் முன்பு இருந்ததைப் போலவே இருக்கும். கண்கள் மாறுவதில்லை; ஏனென்றால் அவை ஆன்மாவின் ஜன்னல்கள். எவரது கண்கள் கோபம் அல்லது பயம் அல்லது குரூரத்தை பிரதிபலிக்கிறதோ அவர்கள் மாறுவதற்கு, ஆன்ம அழகின் வெளிப்பாட்டை மறைத்து தடை செய்யும். அழகற்ற பண்புகளை விலக்குவதற்கு முயல வேண்டும். சூழ்நிலை மற்றும் சகவாசத்தின் மாற்றத்தால் உங்கள் உடலும் உள்ளமும் ஓரளவிற்கு மாற்றமடைகின்றன. ஆனால் கண்கள் மாறுவதில்லை. அவற்றில் அதே வெளிப்பாட்டுடன் நீங்கள் மீண்டும் பிறக்கிறீர்கள்."

"உங்கள் நாட்டங்களை வைத்து நீங்கள் உங்கள் முற்பிறவியில் ஓர் ஆணாக இருந்தீர்களா அல்லது பெண்ணாக இருந்தீர்களா என்பதைக்கூட நீங்கள் கூற முடியும். பல பெண்கள் ஆண் தன்மை உடையவர்களாக இருக்கின்றனர்; பல ஆண்கள் பெண்கள்போல இருக்க விரும்புகின்றனர்.

ஆண்களும் பெண்களும் சம முக்கியத்துவம் உடையவர்கள். பகுத்தறிவு மற்றும் உணர்ச்சி, ஆண்கள் மற்றும் பெண்களாகிய இருபாலாரிடமும் உள்ளன. ஆனால் ஆண்களிடம் பகுத்தறிவு மேலோங்கி உள்ளது. பெண்களிடம் உணர்ச்சி, மேலோங்கி உள்ளது. ஓர் ஆண் மகனை, அவனது உணர்ச்சியின் கவனத்திற்கு ஈர்ப்பதைவிட அவனது பகுத்தறிவின் கவனத்திற்கு ஈர்ந்து, அவனிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவது சுலபமாகும்; ஒரு பெண் அவளது உணர்ச்சிகளின் கவன ஈர்ப்பிற்கு மிகவும் தயாராக இணங்குகிறாள்."

மேலும் அவர் கூறுகிறார்: "இறைத்தொடர்பு மூலம் இந்த இரண்டு பண்புகளின் இணக்கத்தை அல்லது சமநிலையை உங்களுக்குள்ளேயே ஏற்படுத்த முடியும். நான் என்னை ஓர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. நான் மற்றவர்களிடம் ஓர் அன்னையின் அன்பை உணர்கிறேன். ஆனால் எனது பகுத்தறிவு அல்லது தந்தை இயல்பு சம்மதிக்கவில்லையெனில், என் உணர்ச்சிகளின் கவனத்தை ஈர்த்து என்னை எவரும் மாற்ற இயலாது. பகுத்தறிவு மற்றும் உணர்ச்சியின் தெய்வீக சமநிலையை அடைவதுதான் ஆண், பெண் ஆகிய இருவரது நோக்கமாக இருக்க வேண்டும். ஆண் பொதுவாக அதிக உணர்ச்சியையும் பெண் அதிக நியாய உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்."

**70**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு மேம்படுவதற்காக**



## ஓர் உறவிலாவது நாம் அன்பை பூரணமடையச் செய்ய வேண்டும்

குருதேவர் தொடர்ந்து அருளுகிறார்:" நமது முற்பிறவி களை நினைவு கூர இறைவன் வழக்கமாக ஏன் அனுமதி அளிக்கவில்லை என்பதற்கு ஓர் ஆழ்ந்த காரணம் உண்டு. அது ஏனென்றால், மற்றவர்களையும் சேர்த்து அரவணைத்துச் செல்வதற்குப் பதிலாக, நமக்கு முன்பே தெரிந்தவர்களிடம் அதிக இனப்பற்றுடன் இருப்போம் என்பதால்தான். இறைவன், எல்லோருக்கும் நாம் நட்பையும் அன்பையும் தர வேண்டும் என விரும்புகிறான். ஆனால் நாம் அதை ஓர் உறவிலாவது பூரணமடையச் செய்ய வேண்டும். பழைய நணபர்களை மீண் டும் சந்திக்கும்பொழுது அவர்களுடனான உறவில் உங்கள் அன்பை நீங்கள் பூரணமடையச் செய்ய முடியும். குருவானவர் எவரிடம் தெய்வீக நட்புநிலையை பூரணமாக்குகிறாரோ, அவரே சீடர் எனப்படுகிறார். எவர்கள் குருவின் விருப்பங்களை பின்பற்றுகின்றனரோ அவர்களே அவரது சீடர்களாவார்கள். உண்மையான குருவின் விருப்பங்கள்



தெய்வ ஞானத்தால் வழிநடத்தப்படுகின்றன; அவரது விருப்பங்களுடன் நீங்கள் இசைந்திருந்தால், அவர் தானே சுதந்திரமாக இருப்பதுபோல், நீங்களும் சுதந்திரமாகிவிடுவீர்கள்.

பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்: "எனது இக்கோட்பாட்டை எம்மனிதர் சிரத்தையுடனும் பொறாமைப்படாதும் பின்பற்றுகிறார்களோ, அவர்கள்கூட வினையினின்று விடுபடுகிறார்கள்." (பகவத் கீதா அத்.3, ஸ்லோகம்.30)

எல்லாவற்றிற்கும் மேலாகத் இப்பிறவியில் உங்களால் முடிந்தவற்றை அதிகமாகக்கற்று வாழ்க்கையையும் பள்ளியில் ஆன்மீக வளர்ச்சியில் மிக உயர்ந்த வகுப்பில் தேற முயல வேண்டும். இறைவனுடன் தொடர்பு கொள் ளுங்கள்.

அதை உங்களால் செய்ய முடியும்போது, அனைத்து தாழ்ந்த இயல்புகளுடைய வாழ்வின் குறைபாடுகள் மன்னிக்கப்படுகின்றன. உங்களை வாழ்க்கையின் தாழ்ந்த கடமைகளுடன் பிணைக்கும் கர்மவினையிலிருந்து விடுபட ஞானத்தையும் இறைஉணர்வு நிலையையும் வளர்த்துக்கொள்ளுங்கள்."

குருதேவர், பரிசுத்தமான இதயத்துடன் இருக்கச் சொல்கிறார். ஆரம்பப் பாடமே அது தான். இதயம் பரிசுத்தமாக இருந்தால் ஒழிய இறைவனை அணுகவோ, காணவோ அவனுடன் பேசவோ, அவனுடன் தொடர்பு கொள்ளவோ இயலாது. தூய்மை எப்படி ஏற்படும்? ஆசைகள் மட்டும்தான் அதற்குக் காரணம் அத்துடன் சுயநலமும் வளரத் தொடங்கும். உலகப் பொருட்கள், பணம் போன்ற மற்ற எந்தப் பொருட்களும் அழுக்குதான்.

அதனால் உலகப் பொருட்களும் அழுக்கு தான். எவ்வாறான தூய்மையான இதயம் இருந்தாலும் உலகப்பொருளாசை ஒருவனுக்கு இருந்தால் அது நன்றன்று. அது இருக்கும் வரையில் இதயம் தூய்மை அடையாது. அனைத்தாசைகளும் கடந்த ஓர் ஆன்மாவின் எண்ணம் இறைவனிடத்தில் இருக்கும்; இறை சித்தத்துடன் இணைந்திருக்கும். அப்பொழுதுதான் இதயம் தூய்மை அடைகிறது; அப்பொழுதுதான் அம்மனிதனின் எண்ணம் ஒரு பொருளின்மேல் நிலைத்து நிற்கிறது.

தேவையற்றதும் துன்பங்களை ஈட்டித் தருகின்றதுமான உலக ஆசைகள் அனைத்தும் ஒழியும்போது, ஏதாவது ஒரு பிடிப்பு அல்லது உறவு வேண்டும் அல்லவா! அந்த உறவுதான் இறைவன்.அதுமட்டும் தான் நிலைத்திருக்கும்.

அதுமட்டும்தான் எப்போதும் நம்முடன் இருக்கக்கூடிய உறவு. உலக அறிவு அல்லது பொது அறிவு இருந்தால் மட்டும் போதும் என்பர் பொரும்பாலானோர். அது மட்டும் இருந்தால் பிறப்பும் இறப்பும் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

ஆன்மாவைப்பற்றிய அறிவு அல்லது பரம்பொருளைப் பற்றிய அறிவு அல்லதுபரப்பிரம மத்தைப் பற்றிய அறிவு மட்டும் இருந்தால் போதும். பிறப்பு இறப்பு என்னும் பெரும் பிணியை ஒழிக்கலாம். 'உயர்உணர்வு' நிலையை இறைவன் அருள்வான். இறைவனின் உறவுக்காக ஏங்குங்கள்! அவனுடன் வாழ பேராவல் கொள்ளுங்கள்1 பிரபஞ்சம் முழுவதும் நிறைத்திருக்கும். இறைவனை அறிய முந்துங்கள்! அதற்கான பயிற்சி செய்ய முன் வாருங்கள்! இறைவனிடத்தில் எப்பொழுதும் பிரார்த்தனை செய்தவாறு வாழவேண்டும். அவனை ஒருபோதும் மறவாமலிருக்க வேண்டும். இவ்வாறிருந்தால், இறைவன் ஒவ்வொரு நிமிடமும் நம்முடன் இருப்பதை நாம் உணரலாம்.

பொருளாசைக்குப் பதில் பரம்பொருளாசையும் சுயநலத்திற்குப்பதில் சுயஆராய்வும் மனிதனுக்கு இருக்க வேண்டும். பரம்பொருளின்மேல் பேராவல் கொள்வது உன்னதமான குணமாகும். அதாவது இறைவனை காதல் கொள்வது என்று பொருள்.. இதுபோன்ற குணங்கள் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்குமேயானால் வேறு எந்த தீயகுணங்களும் அந்த ஆத்மாவைச் சேராது. இவ்வாறு ஒரே பொருளான பரம்பொருளில் ஓர் அத்மா வசிக்கலானால் அந்த ஜீவாத்மா துளியும் சந்தேகமின்றி பரமாத்மாவுடன் இரண்டறக்கலந்துவிடும்.

நாம் அடையவேண்டிய பொருள் பிரம்மம். அது குறித்து பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் கூறுகிறார்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909



ஆன்மிக மாதமிருமுறை இதழ்

ஆன்மிகமலர் மெயில் புக்




மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள்,
மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த
ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

# நாம் நாமஜபம் செய்வதற்கு குறிப்பிட்ட இடமோ அல்லது நேரமோ தேவையா?

ஆன்மீக சாஸ்திரப்படி நாமஜபம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட இடமோ அல்லது ஒரு குறிப்பிட்ட நேரமோ தேவையில்லை.

இதற்கான காரணங்கள் என்னவெனில்:

கடவுள் பிரபஞ்சத்தை படைத்தபோதேஅதன் ஒவ்வொரு அணுவிலும் தானும் நிறைந்தே இருக்கும்படி அதனை தோற்றுவித்தான். மாறாக வேறு எந்தப் பொருளை யார் உற்பத்தி செய்தாலும் அந்தப் பொருளில் அந்த நபர் இருப்பது கிடையாது. உதாரணமாக பானை செய்யும் குயவன் அந்தப் பானையில் இருப்பதில்லை.

❖ இறைவன் இந்த பிரபஞ்சத்தையும்காலத்தையும் படைத்திருப்பதால் இவை இரண்டிலும் எப்பொழுதும் இறை தத்துவம் நிறைந்தே காணப்படுகிறது. எனவே ஒருவர் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நாமஜபம் செய்து இறைவனின்தெய்வீக இருப்பை உணர்ந்து கொள்ளலாம்.

❖ காலத்தைபொருட்படுத்தாமல் நாம் நாமஜபம் செய்வதன் மூலம் இறைவனின் தெய்வீக சக்தியை அணுகும்பயனையும்பெறலாம்.

❖ஒரு குறிப்பிட்ட காலத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திலோ நாமஜபம் செய்வதை விட நாம் நமது அன் றாட அலுவல்களில் ஈடுபட்டிருக்கும்போதே நாமஜபமும் செய்வது மிகவும் உயர்ந்தது. இவ்வாறு சொல்வதற்கு காரணம் என்னவென்றால் நமது அன்றாட அலுவல்களை செய்யும்போதே நாமஜபமும் செய்வது நமது ஆன்மீக பயிற்சி தொடர்ந்து நிகழ உதவுகிறது. அதன் பயனாக அதாவது தொடர் நாமஜபமாகிய ஆன்மீக பயிற்சியின் மூலம் நாம் எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் இறைவனுடன் தொடர்பு கொண்டவராக இருக்க முடிகிறது.






அதிகாலையில் அதாவது சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே எழுந்து நாமஜபம் செய்ய வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். இதற்கு காரணம் என்னவென்றால் மற்ற நேரங்களைவிட அதிகாலைப் பொழுதில் சுற்றுப்புற சூழ லில் சாத்வீக தன்மை நிறைந்திருப்பதால் நாம் நாமஜபம் செய்வது எளிதாக இருக்கும் என்பதே ஆகும்.

ஆன்மீக சாஸ்திரப்படி இது உண்மையே ஆயினும் இதன்படி செய்வதால் நமக்கு கிடைக்கும் ஸத்வ குணத்தின் விகிதாசாரம் .0001% ஆகும். எனவே ஒரு ஸாதகர் தனது இயல்பிற்கு ஏற்ற அதாவது அவருக்கு எந்த நேரம், எந்த காலத்தில் நாமஜபம் நன்கு நடக்கிறதோ அப்பொழுது அவர் நாமஜபம் செய்வது நல்லது என்று பரிந்துரைக்கப்படுகிறது. எனவே அதிகாலையில் எழுந்து கொள்ளும் வழக்கமில்லாத ஒருவர் நாமஜபம் செய்ய வேண்டும் என்பதற்காக தன்னைத் தானே கட்டாயப்படுத்திக் கொண்டு எழத் தேவையில்லை என்பதே இதன் பொருள்.

விலகல் முறையின் மூலம் நாமஜபம் ஆழ்மனதில் எவ்வாறு செயல்படுகிறது

ஆழ்மனதில் பதிவாகியுள்ள தவறான எண்ணங்களை நாமஜபம் செயல்பட்டு அழிக்கிறது. விலகல் முறை எனப்படும் இம்முறையினால் நாமஜபத்தின் மூலம் நன்மை பெற உதவுகிறது.

அருகில் உள்ள படத்தில், வெளிமனதிற்கும் ஆழ்மனதிற்கும் இடையே ஒரு தடுப்பு சுவர் இருப்பதைக் காணலாம். இது சில சிறப்பு தன்மைகளை உடையது. ஆழ்மனதில் பூட்டி வைக்கப்பட்ட சில ரகசியங்களை வெளி மனம் அறிய இது அனுமதிப்பதில்லை. இதில் துளைகள்

இருந்தாலும், இது ஒரு சமயத்தில் ஒரே ஒரு எண்ணத்தை மட்டுமே ஆழ் மனதில் இருந்து வெளிமனதிற்கு செல்ல அனுமதிக்கிறது. மிகவும் வலிமை உள்ள எண்ணமே இவ்வாறு வெளியேறுகிறது.

எனவே ஆழ்மனதிலிருந்து பதிவுகள் வெளிமனத்தை திரும்பத் திரும்ப போய் இடித்து விட்டு தான் எங்கிருந்து வந்ததோ அந்த தனது இருப்பிடமாகிய மையத்திற்கு திரும்பி வந்து அதை வலுப்படுத்துகிறது.

இருந்தாலும் நாமஜபமாகிய ஆன்மீக பயிற்சியினால் பக்தி மையம்மென் மேலும் வலுவடைய, அதுவே வலுவுள்ள எண்ணமாக வெளிமனத்தில் எழும்புகிறது.

இறைவனின் நாமம் ஆழ்மனதிலிருந்து புறப்பட்டு வெளி மனத்திற்கு வரும் ஒவ்வொரு முறையும், நடுவில் உள்ள தடுப்பு சுவர் ஆழ்மனதிலிருந்து வெளிமனதிற்குள் வேறு எந்த எண்ணமும் நுழைய அனுமதிக்காமல் தடுத்து விடுகிறது.

இவ்வாறாக வரைபடத்தில் காட்டப்பட்டது போல், எந்த எண்ணமும் ஆழ் மனதிலிருந்து வெளிமனதிற்கு செல்ல இயலாதவாறு தடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகிறது.

இம்மாதிரியான செயல்பாட்டில் மற்ற பதிவுகளும் அதன் மையங்களும் மிகக் குறைந்த கவனத்தையே பெறுகின்றன. தொடர்ந்த கவனிப்பின்மையால் மற்ற மையங்களின் செயல்பாடு குறைந்து கொண்டே வந்து, இறுதியில் இல்லாமலேயே போய் விடுகிறது. எனவே இந்த பயனுள்ள முறை மூலமாகவும் பக்தி மையம் ஆழ்மனதை தூய்மைப்படுத்துகிறது.

– மேலும் விவரங்களுக்கு:
hindujagruti தொ.எண்:
9380949626





# மந்திர ஜபமும் செய்யும் முறையும்!




இறைவனை அடைய பல்வேறு வழிமுறைகள் இருந்தாலும், பூஜை, யோகம் தியானம் போன்றவை அந்த வழிமுறையை எளிமையாக்கும். அதிலும் ஒவ்வொரு தியான முறையும் பல்வேறு மாறுபட்ட வழிமுறைகளைக் கொண்டதாகும். அதில் ஒருவகைதான் ருத்ராட்சம் அல்லது துளசி மணியை குறிப்பிட்ட எண்ணிக்கையில் மாலையாக கட்டி மனதை ஒருமுகப்படுத்தி மாலையல் உள்ள மணிகளை அட்சர மந்திரத்துடன் உருட்டி தியானம் செய்யும்போது பல்வேறு அபரிமிதமான பலன்கள் கிடைக்கும், இந்த வகையில் தியானம் எவ்வாறு செய்யவேண்டும் என்பதை எளிமையாக அறிந்து கொள்ளலாம். செய்யும்போது , பல்வேறு வழ

1. ருத்ராட்ஷம் அல்லது துளசி மாலையை பயன்படுத்தி ஜெபம் செய்ய வேண்டும்.

2. வலது கை நடுவிரல் மற்றும் கட்டை விரலால் மட்டுமே மாலையை அழுத்த வேண்டும். ஆட்காட்டி விரலில் ஜபம் செய்தால் பலன் இல்லை.

3. 108 மணிகள் கொண்ட மாலையை பயன்படுத்த வேண்டும். உடலில் 108 புள்ளிகளில் 72000 நாடிகள் இணைவதால், அந்த பகுதியை தூண்ட இந்த 108 மணிகள் பயன்படும். மேலும் ராசி மண்டலத்தில் நட்சத்திரங்கள் அனைத்தையும் பிரிக்கும் பொழுது 108 பாகங்கள் உண்டாகிறது. ஜெப மாலையின் எண்ணிக்கை அதன் அடிப்படையில் அமையும். எண்ணிக்கை பெற்ற ஜெபம் பயனற்ற செயலாகும்.

4. க்ருஷ்ண மணி என அழைக்கப்படும் 109 வது மணியை தாண்டக்கூடாது. மீண்டும் ஜெபித்த வழியே மாலையை திருப்பி ஜெபிக்க வேண்டும்.

5. தர்ப்பை ஆசனம் அல்லது கம்பளித் துணியில் அமர்ந்து ஜெபம் செய்யவேண்டும். ஜெபம் செய்யும் பொழுது உடலில் மின்னூட்டம் ஏற்படும். அவை நமது உடலிலேயே தங்க வேண்டும். பூமியில் உடல் தொடாமல் இருக்க மின்கடத்தாப் பொருட்களான தர்ப்பை, கம்பளி துணியும் பயன்படும்.

வெறும் தரையில் அமர்ந்து ஜெபம் செய்யக் கூடாது. மேலும் தர்ப்பை ஆசனம் அல்லது கம்பளி துண்டின் மேல் ஓர் மெல்லிய வெள்ளைத் துணியை விரித்து அதன் மீது அமர்ந்து ஜெபம் செய்யவும்.

6. ஜெபிக்கும் பொழுது ஜெபமாலைவெளியே தெரியாத படி ஓர் துணியிலோ அல்லது அங்க வஸ்திரம் அணிந்து அதன் உள்பகுதியிலோ வைத்து ஜெபம் செய்யவேண்டும்.

7. பத்மாசனம், சுகாசனம் மற்றும் சித்தாசனத்தில் அமர்ந்து ஜெபிக்கவேண்டும்.

8. தீட்சை பெற்ற மந்திரத்தை சத்தமாகசொல்லக்கூடாது. உதடுகள் அசையக் கூடாது. மனதுக்குள் உச்சரிக்கவேண்டும். மானஸ ஜெபம் என்பார்கள். நாமாவளி மந்திரங்கள் பாராயணம் செய்யும் பொழுது உரக்க சொல்லலாம். குருவிடம் பெற்ற தீட்சை மந்திரத்தை சப்தமாக ஜெபிப்பது, வெளி நபர்களுக்கு கூறுவது, எழுதிவைப்பது அனைத்தும் மந்திர யோகத்திற்கு எதிரான செயல்கள். இது போன்று செயல்பட்டால் மந்திரம் சித்தி ஏற்படுவதில் சிக்கல் உண்டாகும்.

9. எந்த ஒரு செயலும் அதற்குறிய இடத்தில்

செய்தால் சிறப்பாக நடைபெறும். உதாரணமாக சமையலறையில் உணவு தயாரிக்காமல் வேறு அறைகளில் சமைத்தால் பல அசௌகரியம் ஏற்படுவது இயல்பு. இது போல மந்திரஜெபம் செய்ய ஏற்ற இடம் என சில இடங்கள் உண்டு. இடத்திற்கு ஏற்றவாறு மந்திரத்தின் பலமும், பலனும் வேறுபடும்.

வீட்டில் அமர்ந்து ஜெபம் செய்தால் ஒரு பங்கு பலன் கிடைக்கும். பசுவின் அருகில் அமர்ந்து ஜெபம்செய்தால் 100 மடங்கு பலன் கிடைக்கும். ஆறு மற்றும் குளக்கரையில் அமர்ந்து ஜெபித்தால் 1000 மடங்கு பலன். மலை மீது அமர்ந்து ஜெபித்தால் 10,000 மடங்கு பலன். கோவிலில் அமர்ந்து ஜெபித்தால் லட்சம் மடங்கு பலன் கிடைக்கும். குருவின் பாத கமலங்களுக்கு அருகில் அமர்ந்து ஜெபித்தால் கோடானகோடி பலன் ஏற்படும் என மந்திர சாஸ்திரம் கூறுகிறது.

10. சந்தியாகாலவேளை எனும் சூரிய உதய மற்றும் அஸ்தமன காலத்தில் ஜெபம் செய்தால் அதிக பலன் உண்டு. இந்த காலகட்டத்தில் ஜெபம் செய்யாமல் மற்ற நேரங்களில் மந்திரம் அஜபமாக உருவாகும். கிரகணம், பௌர்ணமி மற்றும் அமாவாசை காலங்களில் ஜெபம்செய்ய பன்மடங்கு பலன் ஏற்படும். மந்திர ஜெபம் செய்து வரும் பொழுது எளிமையாக ஜீரண மாகும் உணவு, மெல்லிய ஆடைகளைஅணிந்து வந்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படு ம்

11. மந்திரம் என்பது மனதை ஒருமுகப்படுத்தும் ஒரு முக்கிய சாதனமாகும். பெரும்பாலான மந்திரங்கள் தெய்வ வழிபாட்டிற்குரியன ஆகும். சில மந்திரங்கள் நோயைக் கட்டுப்படுத்தவும், சில பகையை வெல்லவும் பயன்படும். நமது சித்தர்கள் இவற்றை மானிடர்களின் நலனைக் கருதியே வெளிப்படையாக வெளியிட்டனர்.

12. மந்திரங்களை அமைதியான சூழ்நிலையில், உடல், மனம், ஆன்மா மூன்றையும் அந்த மந்திரத்தில் அந்த மந்திரத்திற்கு உரிய தெய்வத்தில், அல்லது தேவதையில் நிலை நிறுத்தி உரிய ஆசனத்தில் (பத்மாசனம், சுகாசனம் போன்ற) அமர்ந்து உரிய பூசைகளைச் செய்து உச்சரிக்க வேண்டும். மந்திரங்களை உச்சரிக்கும் போது உரிய விரிப்பில் (மான் தோல், புலித்தோல், உரிய மரப்பலகைகள், பட்டுத் துணி, தர்ப்பை, வெள்ளை வஸ்த்திரம்) அமர்ந்து உச்சரிக்க வேண்டும்.

13. கண்டிப்பாக வெறும் தரையில் அமர்ந்து மந்திர



உச்சாடணம் செய்யக் கூடாது. அதிகாலை 4.00 மணிமுதல் 6.00 மணிவரையான பிரம்ம முகூர்த்தத்தில் மந்திர உச்சாடனம் செய்வது சிறப்பான பலன்களைத் தரும். அப்படி முடியாதவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தினை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் தொடர்ந்து அந்த நேரத்திற்கே மந்திர உச்சாடணம் செய்ய வேண்டும்.

14. மந்திரங்களை உச்சரிக்கும் போது, 1. சத்தமாக, 2. உதடு மட்டும் அசைந்து, 3. சத்தமே வராமல் மனதிற்குள் என உச்சரிக்கலாம் இதில் மூன்றாவதாக சொன்ன முறையிலேயே அதிக பலன் உள்ளது. அதாவது உதடு, நாக்கு அசையாமல் மந்திரத்தினை மனதிற்குள்ளேயே உச்சரிக்க வேண்டும்.

15.மந்திரத்தின் தன்மைக்கேற்ப திசையினை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஞான மந்திரங்கள் வடக்கு நோக்கியும், இல்வாழ்விற்குரியன கிழக்கு நோக்கியும், அமர்ந்து உச்சரிப்பது சிறப்பு. குறைந்த பட்சம் மந்திரங்களை 108 முறை அவசரம் காட்டாது உச்சரிக்க வேண்டும். மனதிற்குள்ளேயே நாவசையாமல் உச்சரிப்பவர்கள் 54, 27 முறை உச்சரிக்கலாம். 16 தடவைக்கு குறையாமல் உச்சரிக்க வேண்டும்.

16. மந்திரங்களை உச்சரிக்கும் இடம் சுத்தமானதாக இருக்க வேண்டும். பூசை அறை சிறப்பானதாக இருக்கும். பூசை அறையில் நல்ல நறுமணமுள்ள ஊதுபத்தி பொருத்தி அறை மனதை மயக்கும் நறுமணமுள்ளதாக பார்த்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான நறுமணம் பிடிக்குமாதலால் அவரவர்கள் தங்களிற்கு பிடித்த நறுமணத்தினை தேர்ந்து எடுத்துக் கொள்வது நல்லது.

17. யட்சிணி, மோகினி போன்ற தேவதைகளிற்கு மல்லிகை மணம் பிடிக்குமாதலால் அவற்றிற்கு மல்லிகை மணமுள்ள ஊதுபத்தி உபயோகிப்பது சிறப்பு. அதேபோல் அந்தந்த தெய்வங்களிற்கு, தேவதைகளிற்கு பிடித்த நறுமணத்தினை தெரிந்து உபயோகிக்க வேண்டும். சாம்பிராணி புகைக்கு தேவதா ஆகர்ஷண சக்தி உள்ளதால் சாம்பிராணி தூபம் உபயோகிப்பது சிறப்பானது.

18. பௌர்ணமி, அமாவாசை, அட்டமி, ஏகாதசி திதிகள் வரும் நாட்களும், சிறப்பு விரத தினங்களும் மந்திர உச்சாடணத்திற்கு சிறப்பான நாட்களாகும். சூரிய, சந்திர கிரகண நாட்களில் கிரகண வேளையில் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் ஒன்றுக்கு நூறாக பலனைத்தரும்.

19. மந்திரங்களைத் தெரிவு செய்யும் போது சாத்வீக மந்திரங்களாக இருப்பது நல்லது. மந்திர உச்சாடணம் செய்வதற்கு முன்னர் வினாயகரை முறைப்படி வழிபாடு செய்து எந்த தடங்களும் இல்லாமல் எடுத்த செயல் வெற்றிகரமாக முடிய அருள் புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டு பின்னர் தான் மந்திர உச்சாடண வழிபாட்டினை ஆரம்பிக்க வேண்டும்.

20. முதலில் மந்திரத்திற்குரிய தேவதையிற்கு மலர், தூப, தீப, நைவேத்திய ஆராதனை செய்த பின்னர் மந்திரங்களை உருக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். உரிய எண்ணிக்கை உருக் கொடுத்த பின்னர் கற்பூர ஆரத்தி காட்டி பூசையினை நிறைவு செய்ய வேண்டும். உருக் கொடுக்கும் எண்ணிக்கையை மனதில் நிறுத்திக் கொள்ள உரிய ஜெப மாலையை உபயோகிக்கலாம். ஜெப மாலைகள் மந்திரத்தின் தன்மைக்கேற்ப ருத்திராட்சம், ஸ்படிகம், மிளகு, தாமரைக் கொட்டை, துளசி என மாறுபடும். ஜெப மாலையின் மணியின் எண்ணிக்கை 108 உடையதாக இருக்க வேண்டும்.

21. மந்திரங்களை ஒரு குருவின் மூலமாக உபதேசம் பெற்று ஜெபிப்பதே சிறப்பு. தகுந்த குருவினால் மட்டுமே மேலே சொல்லப்பட்ட சகல விடயங்களிலும் சரியான வழியினைக் காட்ட முடியும்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# கல்வியையும் அதன் முறையையும் வைத்துப் பார்க்கக் கூடாது

❖ கல்வியில் எதிர்பார்ப்பு மிகவும் பெரியது. கல்வியின் தேவை மிகவும் ஆழமானது. உயர்வானதும் கூட. கல்வியுள் ஆழம் மிகவும் வேகமானது. அது நம்மிடத்தில் குறைவானது. கல்வியில் குதித்து மூழ்குவது என்பது நமது ஒழுக்கம். எப்படிப் பார்த்தாலும் கல்வி என்பது மனிதனுடைய ஒரு போராட்டப் பொருள்.

❖ கல்வியின் எடை என்பது மிக மிகப் பெரியது. அது கல்வியுள் இல்லை. மாறாக உன்னிடம் இருக்கிறது.



❖ ஒரு தேசத்தின் எடை என்பது அதன் தன்மை எவ்வளவு இருக்கும் என்று கல்வி, தொழிற்கல்வி இவைகளின் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

❖ ஒரு குறிப்பிட்ட துறைக் கல்விக்குள் கல்வியின் தரம் வைக்கப் பட்டிருப்பதில்லை. அது ஒரு மனிதனின் குணத்தினுள் வளர்ந்து வெளிப்பட்டு விடுகிறது.

❖ கல்வியின் தரத்தை மனிதர்களின் குணத்தோடு ஆண், பெண் இருபாலரையும் வைத்து ஒப்பிட்டு விடுகிறார்கள். ஏனென்றால் கல்வி குணத்தை மேம்படுத்தி விடுகிறது. இதனால் அதன் தன்மைகளெல்லாம் ஆகாயத்தின் அளவு மிக உயரம். இப்படி கணக்கிட்டு விட வேண்டும்.

❖ பணம் கட்டாமல் நாமே தடையின்றி படிக்கலாம். இப்படிப்பட்ட சுதந்திரமான வார்த்தையை நாம் எடுத்தே தீர வேண்டும். ஏனெனில் கல்வியை அனைவர்க்கும் இனாமாகத் தருகிறோம் என்பதே அரசாங்கத்தின் மேன்மையான கொள்கை. இது உலகத்தில் உள்ள தெளிவானவர்களின் அறிக்கையைப் போன்றது.

❖ உலகில் ஏழை நாடுகளும், பணக்கார நாடுகளும் இருக்கின்றன. ஏழை நாடுகள் எப்பொழுதுமே கல்வியை விரும்புகின்றன. ஆனால் பணக்கார நாடுகளோ கூடவே முழு அமைதியையும் விரும்புகின்றன.

❖ உயர்ந்த சிந்தனை செய்வதில் தங்களுக்கு ஒரு தகுதியும் ஒரு தரமும் இந்தியர்கள் அவர்களது கல்வியின் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தற்பொழுது இந்நாட்டில் வாய்ப்பாக இருக்கின்ற கல்வியையும் அதன் முறையையும் வைத்துப் பார்க்கக் கூடாது. உள்ள கல்வியை வைத்து தன்னை சமுதாயத்திற்குள் கல்விமானாக ஆக்கிக் கொள்ளும் ஒரு மண் தான் இந்தியா, ஒரு முறையில் நாம் நல்லவர்களாக இருக்கிறோம். வேறு ஒரு முறையில் உள்ளதே போதும் என்று சொல்லுவதில் நாம் பாவப்பட்டவர்களாக இருக்கிறோம்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
ருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# 18-ம் படி நாயகனுக்குரிய சபரிமலையின் சிறப்பு



சபரிமலை ஐயப்பனை வருடந்தோறும் சென்று வரும் பல அன்பர்களுக்கு சபரிமலையைப் பற்றிய முழுவதுமான தகவல்கள் தெரியாமலேயே அவைகள் மறைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சில தகவல்களை தெரிந்து கொள்ள பல்வேறு அன்பர்கள் கூறிய தகவலை தொகுத்து நமது ஆன்மிக மாதமிருமுறை மெயில் புத்தகம் வாசகர்களுக்கு வழங்குகிறது.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் வளராத சமயத்தில் காசிக்கு செல்பவர்கள் குடும்ப வாழ்க்கையை முடித்து, கடமைகள் அனைத்தையும் துறந்த பின்தான் செல்வார்கள். அதற்கு காரணம் காசிக்கு செல்பவர்கள் திரும்ப வருவார்கள் என்று யாராலும் நிச்சயம் சொல்ல முடியாது. ஏனென்றால் வாகன வசதியோ, தொழில் நுட்பமோ அக்காலத்தில் இல்லை.

காசி பயணத்தைப் போன்றுதான் சபரிமலை பயணமும் அமைந்தது. அக்காலத்தில் சபரிமலை செல்பவர்கள் "போய் வருகிறேன்" என்று கூறமாட்டார்கள். காரணம் சபரிமலைக்கு சென்றால் திரும்பி வர எத்தனை நாட்கள் ஆகும் என்று அவர்களுக்கே தெரியாது. வந்தாலும் வரலாம் வராமலும் போகலாம் என்ற ஒரு நிலை இருந்தது.

ஐயப்பனின் சன்னதி இங்குதான் உள்ளது என்று யாராலும் சரியாக கணிக்க முடியாதவாறு காட்டைச் சுற்றி பல்வேறு மரங்களும், கோரைப் புற்களுமாக சூழ்ந்திருந்ததாலும், சிங்கம், புலி, பாம்பு, யானை போன்ற விலங்குகளின் சாம்ராஜ்யம் நடந்து கொண்டிருந்ததாலும் சபரிமலை பயணம் மிக... மிக... சிரமம் வாய்ந்த பயணமாகவே இருந்தது.

இதுபோன்ற சிரமமான பயணத்தை துவங்குவதற்கு முன்பே, காட்டிற்குள் சென்று தங்கி, ஐயப்பனை எவ்வாறு காணவேண்டும் என்ற பயிற்சியாக அமைந்ததுதான் "சபரி மலைக்கு மாலை அணியும் பழக்கம்".



வெறும் கட்டாந்தரையில் படுப்பது, காலணி அணியாமல் நடப்பது, போதை வஸ்த்துக்களை விடுவது, இரண்டு வேளை பச்சைத் தண்ணீரில் குளிப்பது, இறை சிந்தனையுடன் இருப்பது, குடும்ப உறவிகளிடமிருந்து சற்று விலகி இருப்பது, சுவை மிகுந்த உணவை தவிர்ப்பது, புலால் உணவை தவிர்ப்பது... போன்ற அனைத்து விரத கட்டுப்பாடும், கொடிய காட்டில் மனிதன் இறை சிந்தனையுடன் ஐயப்பனை தரிசிக்க கடைபிடிக்கப்பட்ட பழக்கவழக்கமே விரத முறையாகவும் கடைபிடிக்கப்பட்டது.

மிக... மிக... கடினமான விரத முறையாக இருந்த காரணத்தாலும், உயிருக்கு உத்திரவாதம் இல்லாத பயணமாக சபரிமலை பயணம் இருந்த காரணத்தாலும் சபரிமலைக்கு மாலை அணிவோர் மிகக் குறைந்த சதவீதமாகவே இருந்தது.

இதுபோன்ற சிரம் மிகுந்த காலத்தில் ஐயப்பனை தரிசித்த அனைவரும் ஐயப்பனுக்கு நிகராகவே கருதப்பட்டதால்தான், அக்காலத்தில் துளசி மற்றும் சந்தன மாலை அணிந்த ஐயப்ப பக்தர்களை "சாமி சரணம்" என்று ஐயப்பனுக்கு நிகராகவே அழைத்தனர்.

மேற்கண்ட நடைமுறைகள் அனைத்தும் சுமார் 25 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்புவரை கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகளாகும். (கால மாற்றம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, மலையை சுற்றி சிமெண்ட் சாலை, நினைத்த பொருள் நினைத்த இடத்தில் வாங்கும் வசதி போன்ற பல்வேறு காரணங்களால் சபரிமலை தற்போது தனது தனித்துவத்தை இழந்து, மிகப் பெரிய சுற்றுலா தலமாகவும், அரசுக்கு வருமானம் ஈட்டித் தரும் மிகப்பெரிய அருங்காட்சியகமாகவே மாறிவிட்டது.) தற்போது பல்வேறு பல மலைகளைச் சுற்றி நடு நாயக மாக அமர்ந்திருக்கும் ஐயப்பனுக்குரிய பல் வேறு சிறப்புகளை எளிமையாக தொகுத்து கொடுத் துள்ளோம்.

## தங்கச் சிலை உருவான விதம்:

பந்தள மகாராஜாவால் செய்யப்பட்ட ஐயப்பன் சிலை ஐம்பொன்களால் செய்யப்பட்ட சிலையாகும். ஒரு சில சமூக விரோத கும்பலால் 19ஆம் நூற்றாண்டில், ஐயப்பன் குடியிருக்கும் இடம் எரிக்கப்பட்டுவிட்டதால், பந்தள மகாராஜாவால் செய்யப்பட்ட சிலை உருகியது, உருகிய பஞ்சலோகத்தை திருவிதாங்கூர் தேவசம் போர்டு மீட்டு, மிகப்பெரிய மணியாக உருமாற்றினர். அந்த மணி தற்போது சபரிமலை 18ம் படிக்கு

வலப்புறம் நிறுவியுள்ளனர். பஞ்சலோக சிலை உருக்கப்பட்டதால் புதியதாக ஐயப்பன் சிலையை தங்கத்தால் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## பதினெட்டு படிகளின் தத்துவம்:

ஐயப்பன் தன்னுடைய 18 கருவிகளைக் கொண்டு 18 படிகளை உருவாக்கியதாக கூறப் படுகிறது அந்த 18 கருவிகள்

1. வில், 2. வாள், 3. வேல், 4. கதை, 5. அங்குசம், 6. பரசு, 7. பிந்திபாவம், 8. பரிசை, 9. குந்தம், 10. ஈட்டி, 11. கை வாள், 12. முன்தடி, 13. கடுத்தி வை, 14. பாசம், 15. சக்கரம், 16. ஹலம், 17. மழு, 18. முஸலம் ஆகிய 18 போர்க் கருவிகள் ஆகும்.

பதினெட்டுப் படிகளையும், ஐந்து இந்திரி யங்கள், ஐந்து புலன்கள், ஐந்து கோசங்கள், மூன்று குணங்கள் என்று கூறுகிறார்கள் அவை முறையே

இந்திரியங்கள் ஐந்து (பஞ்சேந்திரியம்): கண், காது, மூக்கு, நாக்கு, கை கால்கள்.

புலன்கள் ஐந்து (ஐம்புலன்கள்): பார்த்தல், கேட்டல், சுவாசித்தல், ருசித்தல், ஸ்பரிசித்தல்.

கோசங்கள் ஐந்து (பஞ்ச கோசங்கள்): அன்னமய கோசம், ஆனந்தமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், ஞானமய கோசம்

குணங்கள் மூன்று (த்ரி குணங்கள்): ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம்

இந்த பதினெட்டையும் கட்டுப் படுத்தியோ ஜெயித்தோ வாழ பதினெட்டுப் படிகளை ஏற வேண்டும்.

## 18 வகை தத்துவங்கள்

மெய், வாய், கண், காது, மூக்கு, சினம், காமம், பொய், களவு, சூது, சுயநலம், பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, ஸத்ய, தாமஸ, ராஜஸ, என்ற 18 வகை குணங்களை தாண்டினால் பகவான் ஐயப்பனைக் காணலாம்.

## 18 படிகளில் வாஸம் செய்யும் தேவதைகள்

ஒன்றாம் திருப்படி: சூரிய பகவான்
இரண்டாம் திருப்படி: சிவன்
மூன்றாம் திருப்படி: சந்திர பகவான்
நான்காம் திருப்படி: பராசக்தி
ஐந்தாம் திருப்படி: அங்காரக பகவான்
ஆறாம் திருப்படி: முருகன்
ஏழாம் திருப்படி: புத பகவான்
எட்டாம் திருப்படி: விஷ்ணு



ஒன்பதாம் திருப்படி: வியாழ ( குரு ) பகவான்
பத்தாம் திருப்படி: பிரம்மா
பதினொராம் திருப்படி: சுக்கிர பகவான்
பனிரெண்டாம் திருப்படி: இலட்சுமி
பதிமூன்றாம் திருப்படி: சனி பகவான்
பதிநான்காம் திருப்படி: எம தர்ம ராஜன்
பதினைந்தாம் திருப்படி: இராகு பகவான்
பதினாறாம் திருப்படி: சரஸ்வதி
பதினேழாம் திருப்படி: கேது பகவான்
பதினெட்டாம் திருப்படி: விநாயகப் பெருமான்

இதில் கவனிக்கப்பட வேண்டியவை ஒற்றைப்படை வரிசையில் நவக்ரஹ தேவதாக்களும் இரட்டைப்படை வரிசையில் தெய்வக் குடும்பமும் வாஸம் செய்வதாக ஐதீகம், எனவேதான் படிபூஜை சபரிமலையில் சிறந்த முறையில் செய்யப்படுகிறது படிபூஜை நடைபெறும் தினத்தன்று 18 படிகளை பூக்களாலும்; விளக்குகளாலும் அலங்கரித்து அவற்றிற்கு கீழே 18 படி ஏறுமிடத்தில் பிரதான தந்திரி 18 வெள்ளி கலசங்களை வைத்து படிபூஜை செய்வார்.

## 18 திருநாமங்களுடன் ஐயப்பன் அமர்ந்திருக்கும் படிகள்

ஒன்றாம் திருப்படி: குளத்துப்புழை பாலகன்
இரண்டாம் திருப்படி: ஆரியங்காவு ஐயன்
மூன்றாம் திருப்படி: எரிமேலி சாஸ்தா
நான்காம் திருப்படி: அச்சன்கோயில் அரசன்
ஐந்தாம் திருப்படி: புவனேஸ்வரன்
ஆறாம் திருப்படி: வீரமணி கண்டன்
ஏழாம் திருப்படி: பொன்னம்பல வாஸன்
எட்டாம் திருப்படி: மோஹினி பாலன்
ஒன்பதாம் திருப்படி: சிவ புத்ரன்
பத்தாம் திருப்படி: ஆனந்த சித்தன்
பதினொன்றாம் திருப்படி: இருமுடிப் பிரியன்
பனிரெண்டாம் திருப்படி: பந்தள ராஜகுமாரன்
பதிமூன்றாம் திருப்படி: பம்பா வாஸன்
பதினான்காம் திருப்படி: வன்புலி வாஹனன்
பதினைந்தாம் திருப்படி: ஹரிஹர சுதன்
பதினாறாம் திருப்படி: ஸத்குரு நாதன்
பதினேழாம் திருப்படி: பிரம்மாண்ட நாயகன்
பதினெட்டாம் திருப்படி: ஸத்ய ஸ்வரூபன்

## படிபூஜை

18 மலை தேவதைகளை வழிபாடு செய்வதற்காகத்தான் படிபூஜை நடத்துகிறார்கள் அவை என்னவென்றால்

சபரி மலை, பொன்னம்பல மேடு, கவுண்ட மலை, நாக மலை, சுந்தர மலை, சிற்றம்பல மேடு, கல்கி மலை, மாதங்க மலை, மைலாடும் மலை,ஸ்ரீ மாத மலை, தேவர் மலை, நீலக்கல் மலை, தலப்பாறை மலை, நீலி மலை, கரி மலை, புதுச்சேரி, அப்பாச்சி மேடு, இஞ்சிப் பாறை

## 18 படிகளின் சிறப்பு

7. 18 படிகளும் ஒரே கல்லினால் ஆனது எல்லாப் படிகளும் 9 அங்குல உயரமும் 5 அடி நீளமும் உடையதாகும் தேங்காய் உடைத்துப் படிகள் தேய்வதைத் தடுக்கும் பொருட்டு திருவாங்கூர் தேவஸ்தானம் பஞ்ச லோகத்தினால் ( தங்கம் ; வெள்ளி ; பித்தளை ; செம்பு ; ஈயம் ) தகடு செய்து படிகளின் மேல் அமைத்துள்ளனர்.

18 படிகளில் இருமுடிக் கட்டு இல்லாமல் படியேறி வர சிலருக்கு மட்டுமே உரிமையுண்டு அவர்கள் பந்தள ராஜ குடும்பத்தினர், தந்திரிகள், மகர சங்கராந்தியன்று திருவாபரணப் பெட்டியை சுமந்து வரும் ராஜ பிரதிநிதி திருவாபரணப் பெட்டியையும் தங்க அங்கியையும் வரவேற்கும் தேவஸ்தான உறுப்பினர்கள் (வரவேற்கும் சமயத்தில் இவர்கள் ஐயப்பன் அனுமதி பெற்று மாலையணிந்திருக்க வேண்டும்)

தொகுப்பு: ஷ்யாம் சுந்தர்





# தர்பையின் மகத்துவம்



ஆன்மிக விஷயங்கள் அனைத்திற்கும் தர்ப்பை புல் மிக அவசியமானதாக விளங்குகிறது. யாகம் வளர்க்கும்போதும், திதி, கிரகப்பிரவேஷம் போன்ற பல்வேறு ஆன்மிக செயல்களுக்கும் பயன்பட்டாலும், ஆன்மிகத்திற்கு சம்பந்தமில்லாத மனித உடல் நோய்கள் பலவற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

தர்ப்பைப் புல்லை நாட்டு மருந்து கடைகளிலும், கிரகணத்தின்போது கோயில்களிலும் பார்த்திருப் போம். இதன் மகத்துவம் ஏராளமானது. தர்ப்பைப் புல் வளர தண்ணீர் தேவையில்லை. தண்ணீர் இல்லாமலும் வளரும் இது, பல நாட்களுக்கு தண்ணீரிலேயே போட்டு வைத்தாலும் அழுகாத தன்மை கொண்டது. சூரிய கிரகணத்தின் போது இதற்கு வலிமை அதிகம்.

இதன் காற்றுப்படும் இடங்களில் தொற்று நோய் கள் அண்டாது. அதனால்தான் கிரகண காலத்தில் இந்த தர்ப்பைப் புல்லை நாம் பயன் படுத்தும் உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், குடிநீர்களில் போட்டு வைக்கின்றோம். இந்த புல்லில் காரமும், புளிப்பும் இருப்பதால் செப்பு ஐம்பொன் உலோக படிமங்களை இந்த புல்லின் சாம்பலில் தேய்க்கிறார்கள். அவ்வாறு செய்வதால் அதன் ஓசை திறன் குறையாமல் இருக்குமாம்.

தர்ப்பைப்புல் சுவையில் இனிப்பு மற்றும் துவர்ப்புச் சுவையுடையது. குளிர்ச்சியான வீரிய முடையது. சீரணத்தின் இறுதியில் இனிப்புச் சுவையாக நிற்கக் கூடியது.

மூவகை தோஷங்களாகிய வாத பித்த கபங்களை அவற்றின் சீற்றத்திலிருந்து கீழிறக்கி சமநிலைப் படுத்துவதனால் தர்ப்பை ஒரு அருமருந்தாக நாம் குறிப்பிடலாம். சில சர்க்கரை உபாதை நோயாளிகளுக்கு உடலில் எரிச்சலுடன் மஞ்சள் நிறம் கலந்த சிறுநீர் காணப்படும். இதற்கு ஹாரித்ரமேஹம் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. மேலும் சிலருக்கு துர்நாற்றமுள்ளதாகவும், மஞ்சிட்டை (மஞ்சள்நிறம்) கலக்கிய நீர் போன்றதுமாக சிறுநீர் வெளியேறும் நிலையில் அதற்கு மாஞ் சிஷ்டமேஹம் என்றும் துர்நாற்றம், சூடு, இரத்தம் போன்றும் சிறுநீர் வெளியேறுவதும் இரக்த மேஹமென்றும் கூறப்படுகிறது.

இந்த மூன்று வகையான சிறுநீர் உபாதைகள் அனைத்தும் பித்ததோஷத்தினுடைய சீற்றத்தின் விளைவாக ஏற்படுவதால் அதுபோன்ற நிலைக ளில் தர்ப்பைக் குடிநீர் அருந்துவது பித்தத்தினால் ஏற்படக் கூடிய சர்க்கரை உபாதையை குறைப்பதுடன் சிறுநீரகம் மற்றும் சிறுநீர் பாதையில் ஏற்படும் தொற்று உபாதைகளையும் குணப்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு குடிநீர் ஆகும்.

சுமார் 15 கிராம் தர்ப்பைப்புல்லை ஒரு லிட்டர் தண்ணீரில் கொதிக்கவிட்டு அரை லிட்டர் ஆகும்வரை குறுக்கிக் காய்ச்சி குளிர்ந்தபிறகு வடிகட்டி அந்த தண்ணீரை ஒரு நாளில் பலதடவை சிறிது சிறிதாகப் பருகிவர மேற்குறிப்பிட்ட உபாதைகள் நீங்கிவிடும். சிலருக்கு தர்ப்பை நீரைக் காய்ச்சுவதற்கான நேரம் இல்லாமல் இருப்பதால் தர்ப்பைப் புல்லை நன்றாக இடித்து இரவு முழுவதும் பானைத் தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் அதைப் பருகுவதன் மூலம் அந்த நீருக்கான மருத்துவகுணங்களை நம்மால் பெற இயலும். இதற்கு "ஹிமகஷாயம்" என்று ஆயுர்வேதம் பெயரிட்டுள்ளது.



சர்க்கரை உபாதையின் தாக்கத் தையும் நாம் குறைத்துக்கொள்ள முடியும். தர்ப்பைப்புல்லுக்கு மேலும் சில நல்ல மருத்துவகுணங்கள் இருக்கின்றன.

தர்ப்பைப்புல் உடலுக்குக் குளுமையை ஏற்படுத்துவதால் தர்ப்பைப்புல் குடிநீர் வெயில் காலத்தில் அருந்தவேண்டிய ஒரு அற்புதமான பானமாகும்.

தர்ப்பையிலுள்ள நெய்ப்பு, இனிப்பு மற்றும் குளிர்ச்சியின் காரணமாக தாய்ப்பாலையும், சிறுநீரையும் அதிகளவில் சுரக்கச் செய் கிறது.

சிறுநீரகத்தில் ஏற்படும் இரத்த அழுத்தத்தை சீராக்கக் கூடிய தர்ப் பைக் குடிநீரின் உபயோகத்தின் மூலம் இரத்தத்தில் தேங்கும் யூரியா, க்ரியாட்டினின் கழிவுப் பொருட்களை அகற்றகிறது.

சிறுநீரகக் கற்களை உடைத்து வெளி யேற்றும் தன்மை தர்ப்பைப்புல்லுக்கு இருக்கிறது.

தண்ணீர் தாகத்தைப் போக்கும். சிறுநீரகப்பையில் ஏற்படும் வலி மற்றும் அதிகமான மாதவிடாய் இரத்தப்போக்குள்ள பெண்களுக்கும் தர்ப்பைக் குடிநீர் மிகவும் நல்லது என்று பாவப்ரகாசர் எனும் ஆயுர்வேதமுனிவர் குறிப்பிடுகிறார். மஞ்சள் காமாலை உபாதையில் கல்லீரலில் உள்ள கிருமித்தொற்று மற்றும் அதிகமான பித்தஊறல் ஆகியவற்றைக் குறைக்கக் கூடியது. இரத்தத்தில் ஏற்படும் காந்தல் மற்றும் அதன்மூலமாக ஏற்படும் இரத்தமூலம், இரத்தக்கசிவு, வாய்ப்புண் சிறுநீரக எரிச்சல் போன்றவற்றை குணப் படுத்தும்.

நாவிற்கு நல்ல ருசியை ஏற்படுத்தித் தரும். Herpes zoster எனப்படும் நரம்பு தொடர்தோல் எழுச்சியில் தர்ப்பைப் புல் தண்ணீரை வெளிப்புறம் மற்றும் உட்புற உபயோகத்தால் அதில் ஏற்படும் எரிச்சல் மற்றும் குத்தல் வலியை நம்மால் போக்கிக் கொள்ள முடியும் என்று நிகண்டுரத்னாகரம் மற்றும் ராஜநிகண்டு எனும் ஆயுர்வேத புத்தகங்களில் குறிப்புகளாகக் காணப்படுகின்றன.

காஞ்சி மஹாஸ்வாமிகள் தர்ப்பையின் பெருமை களைப் பற்றி, "தர்ப்பை, துளஸி, வில்வம் என்றிப் படி நம் சாஸ்திர காரியம், பூஜை இவற்றில் பிரயோஜனமாகின்றவற் றுக்கெல்லாம் வைத்ய ரீதியிலோ, மற்ற ஸயன்ஸ்களின் ரீதியிலோ sound basis (அழுத்தமான அடிப்படை) இருக் கிறது என்கிறார்கள்.

க்ரஹண காலத்தில் எல்லாவற்றிலும் தர்ப்பையைப் போட்டு வைக்க வேண்டுமென்றால் முன்னே பரிஹாஸம் செய்தார்கள். "சூரியனைப் பாம்பு தின்கிறதாம். அதன் நாக்கை அறுப்பதற்கு தர்ப்பை போட்டிருக்கிறார்களாம்!" என்று கேலி பண்ணினார்கள். ஆனால் இப்போதோ க்ரஹண காலத்தில் அட்மாஸ்ஃபியரிலும், அதற்கும் மேலே இருக்கிற ஸ்ஃபியர்களிலும் அநேக contamination (அசுத்தம்), radiation ஆகியன உண்டாவதாகவும், கர்ப்பத் திலிருக்கிற சிசுவைக் கூட அது பாதிப்பதாகவும், அதனால் "க்ரஹணத் தீட்டு" என்று அந் தக் காலத்தில் சாப் பிடாமல் இருக் கணும் என்று வைத்ததில் ரொம்ப அர்த்தமிருப் பதாகவும், இந்தபாதிப்பை counteract பண்ணும் (எதிர்த்துப் போக்கும்) சக்தி தர்ப்பைக்கு இருக்கிற தென்றும் கூறுகிறார்கள்.

இத்தனை சிறப்பு வாய்ந்த தர்ப்பை நீரை பயன்படுத்தி அதன் நிறைவான பலனை அனைவரும் பெற முயற்சிப்பது ஆரோக்கியத் திற்கான ஒரு திறவுகோலாக அமைத்துக் கொள்வோம்



# குழப்பத்தை தீர்க்கு பூஜை முறைகள்



வீட்டில் பூஜை செய்யும் போது சிலருக்குப் பல குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. வெற்றிலையை எப்படி வைக்க வேண்டும்? எந்த பழம் எந்த தெய்வத்திற்கு உகந்தது? பூஜையை எப்படி ஆரம்பிக்க வேண்டும்? எந்தப் பூ கொண்டு ஸ்வாமிக்கு அர்ச்சனைச் செய்வது எனப் பல சந்தேகங்கள் ஏற்படும்.

வெற்றிலைக்கு நுணியும், வாழைப் பழத்திற்கு காம்பும் அவசியம் இருக்க வேண்டும். வெற்றிலைபாக்கில் நுண்ணாம்பு இருக்கக் கூடாது.

அவல்பொறி, கடலை மற்றும் கல்கண்டு நிவேதனமாகப் படைக்கலாம். பச்சரிசியில் சாதம் செய்து தான் கடவுளுக்குப் படைக்க வேண்டும். மேலும், நாகப்பழம், மாதுளை, கொய்யா, வாழைப்பழம், நெல்லி, இளந்தை, விளாம்பழம், புளியம்பழம், மாம்பழம் ஆகிய பழங்கள் பூஜைக்கு ஏற்ற வையாகும்.

வாழையில் நாட்டுப்பழம் நல்லது. குடுமி தேங்காயை சீராக உடைத்து பிறகு குடுமியைப் பிரிக்க வேண்டும். அழுகிய தேங்காய் இருந்தால், அதனை மாற்றி வேறு தேங்காயை உடைக்கலாம். கோணலான, வழுக்கையான தேங்காய் இருக்கக் கூடாது. வழிப்பாட்டிற்கு முன் பாக சாம்பிராணி புகை போடுவது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். சாம்பிராணி வாசம் கெட்ட அதிர்வுகளை விரட்டும் ஆற்றல் கொண்டது.

கோலமிட்டு, விக்ரகங்களைச் சரியாக அமைத்துக்கொண்டு, விளக்கேற்றி, ஊதுவத்தி ஏற்றி அர்ச்சனை செய்து அதன்பின் கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும்.

விநாயகரை துளசியால் பூஜிப்பது தவறு. பெருமாளுக்கு அர்ச்சதையால் பூஜிப்பதும் தவறு. சிவபெருமானுக்கு தாழம் பூ ஆகாது. திருமகளுக்கு தும்பை பூ ஆகாது. பவளமல்லி சரஸ்வதிக்கும், அம்பிகைக்கு அருகம்புல்லும் பூஜைக்கு உகந்தது அல்ல. வில்வம், கொன்றை, தும்பை, வெள்ளேருக்கு, ஊமத்தை சிவனுக்கு உரியது. காளியம்மன், துர்கை, முருகனுக்கு அரளி பூக்கள் உகந்தவை.

அருகம்புல், மல்லி, சாமந்தி, நீலப்பூ, ரோஜா, பன்னீர் ரோஜா, சங்குப்பூ, தாமரை, மரிகொழுந்து, சம்பங்கி, துளசி, விரிச்சிப்பூ ஆகியவை பூஜைக்கான மலர்கள் என்று ஆன்றோர்களால் கூறப்படுகிறது. சாமந்தி போன்ற மணமில்லாத மலர்கள் பூஜைக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால், அலங்காரத்திற்குப் பயன்படுத்தலாம். அர்ச்சிக்கும் போது முழு மலரால் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும். பூவின் இதழ்களைக் கொண்டு அர்ச்சனை செய்வது மிகவும் தவறாகும். காய்ந்துபோன மற்றும் அழுகிப்போன, வாடிப்போன, பூச்சி கடித்த பூக்களைப் பயன்படுத்த தெய்வ குற்றமாகும். இவையே பூஜை அறையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் ஆகும்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com